[illegible]

No. 39 3 Oct 1929

[illegible]

[illegible] 211, [illegible]

[illegible] 29.2.2[illegible]

189074

..NILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

# கலா நிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
*No. 11*, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ௵ அக்டோபர் ௴ 3உ [No. 39.

OFFICE OF THE RE... 1929

பொருளடக்கம்.

| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader). | 761 |
| 2. | அப்பர். (காப்பிய இலக்கணம்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. | 763 |
| 3. | குலசேகரர் (பிறவி வேண்டுந் துறவி) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. | 675 |
| 4. | தமிழ்ப் பாடம் (திருவரங்கத்துமாலை) | 767 |
| 5. | அண்ட புராணம் (வெங்காய விசயப் படலம்) T. S. இராமசந்திர ஐயர் B.A. | 769 |
| 6. | வில்லிபாரத விளக்கம் (இராசசூயச் சருக்கம்) T. S. நடராஜபிள்ளை B. A, B. L. | 770 |
| 7. | கம்பராமாயணம் (உண்டாட்டுப் படலம்) T. N. சேஷாசலம் B. A, B. L. | 771 |
| 8 | மலர்வனம் (காதன் மாதவி) மதுகரம் | 775 |
| 9. | வர்த்தமானம் | 779 |

## கலா நிலயம்

### சுய கல்சர்.

### IV

**மா**னுடர்க் கியற்கையா யமைந்துள்ள அம்சங்களில் தருமசிந்தனை தெய்வசிந்தனை என்னுமவ் விரண்டையும், இயற்கைச் சக்திகளாகிய சுயஆராய்ச்சி சுயவளர்ச்சி என்பவைகளைக்கொண்டு நெறிமுறையில் பெருக்கிக்கொள்ளும்முயற்சி சுயகல்சர் ஆமாறு இதுவரையில் கூறலாயினோம். மானுட இயற்கைஅம்சங்களில் புத்தியென்பதும் ஒன்று. இனி, புத்திக்கும் சுயகல்சருக்கும் உள்ள தொடர்பினையும் சிறிது ஆராய்வோம்.

புத்தியென்னும் அவ்வம்சத்தை, அதுசெய்யும் தொழிலால் குறிக்கும்போது, பகுத்தறிவு என்கின்றோம். புத்தியென்பது, விஷயங்களின் தன்மையைப் பற்றி யோசிக்கின்றது, காரணகாரிய நிகழ்ச்சியை ஆய்கின்றது, முன்னொன்று நிகழ்ந்ததிலிருந்து பின் என்ன முடியுமென்று தீர்மானம் செய்கின்றது. தனக்குப் புலனான பொருள்களை அவைகளின் தன்மைக்கு ஏற்றவாறும் பயனுக்குஏற்றவாறும் வகைப்படுத்துகின்றது, தொகுக்கவும் தொகுக்கிறது, பலவித தொகைக்கிடையே வேறுபாடுங் காண்கின்றது. இவ்விதத் தொழில்களெல்லாம் புரியும் புத்தியென்னும் அம்சம் எல்லாரிடத்திலும் ஒவ்வோரளவு இருக்கின்றது. அளவிலும், பயிற்சியால் அது அடைந்துள கூர்மையிலும், ஒருவருக்கொருவர் சிறிதும்பெரிதுமாய ஏற்றந்தாழ்வு தோன்றலாகுமே யன்றிப் புத்தி என்பது அறவே இல்லாத மாந்தரில்லை—தன்பால் புத்தியிருக்கின்றதென்று தெரிந்துகொள்ளாத மனிதனும் இல்லை. உண்மையாக இருக்குமளவிற்குப் பலபடி அதிகமாக இருப்பதாக மதித்துக்கொள்வதே கடனாகவும் காண்கின்றோம். மனிதன் தன்னுடைய ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு வேண்டியதோர் பெருங்கருவியாயிருப்பதால் புத்தி தன்னிடத்தில் இருக்கின்றதென்பதை அவன் மறப்பதில்லை. தான் தொடர்ந்த ஆசை நிறைவேறியதாயின் தன்னுடைய புத்தியை மிகவும் மதித்துப் பாராட்டிக்கொள்கின்றான். நிறைவேறாமல் தவறியதாயின் பிறர் கெடுத்தனரென வைவதும், விதியை நோவதும், கண்ணில்லை என்று கடவுளைப்பழிப்பதும் அவன் செய்கின்றானே யன்றித் தன்புத்தியின் குறைவால் நினைத்தகருமம் நிறைந்ததில்லை என்று ஒருவனும் பெரும்பாலும் எண்ணுவதரிது. சுயவாராய்ச்சி செய்யாமல், புத்திக்கு எட்டிய சூழ்ச்சிகளில் ஆழ்ந்து உழல்வதன் முடிவு இன்னதாம். முதலிலே, தன்னுடைய சாமர்த்தியத்தையும் 'கெட்டிக்காரத் தனத்தையும்' நினைத்துநினைத்து மகிழ்வதும், தன்போன்ற புத்திசாலிகளைப் பெரிதும்பாராட்டுபவனுமான போதிலும், முறைப்படி புத்தி முதிர்வடைந்துவருகின்ற வொருவன் சுயவாராய்ச்சியால், தான் சாதித்ததன் லாபத்தையும் சாதிக்கமுடியாமல் விட்டவைகளால் நேர்ந்த நட்டத்தையும் உள்ளவாறு சீர்தூக்கிப்பார்க்கும்போது, வெளிப் பார்வைக்கு இலாபமும் நஷ்டமும்போல் தோன்றுவன பல உண்மையில் அத்தோற்றத்திற்கு மாறான தன்மையை யுடையனவாயிருக்கலாவதும் மெல்லமெல்லத் தெரிந்துகொள்பவனாவான். நூற்றெண்பது வருடங்களுக்கு முன் எழுதிய எட்வர்ட் யங் என்னும் ஆங்கிலக் கவி

யொருவர் இவ்விடயங்களைக் குறிப்பவராய், "முப்பதாமாண்டில் ஒருவன் தான் மடயனென் றயிர்க்கத் தலைப்படுவான்—நாற்பதுவயது ஆகும்போது அது நிச்சயம்" என்றெடுத்துக் காட்டினர். கல்வி முதலிய சாதனங்களால் தன் சுயவாராய்ச்சிச் சக்தியைப்பலப் படுத்திக்கொண்டு அதனுல் தன் 'கெட்டிக்கார'ச் செயல்கள் என்று எண்ணிஇருந்தவைகளில் பலவற்றை நுணுகிநோக்குவானுயின் அவை பெரும்பாலுந் தன் 'முட்டாள்' தனத்திற்கே சாக்ஷியாய் நிற்கலாவதை உணராமற்போவது அருமை. "அறிதோ றறியாமை கண்டற்று" என்று வள்ளுவர் வகுத்த வாய்மையின் கருத்தும் இன்னதே.

ஒருவனைப் பார்த்து, "நீ முன்னுக்கு வரவேண்டும், அதற்கு வேண்டியன செய்துகொள்" என்று உரைப்போமாயின், சாதாரணமாக இவ்வாசகத்திற்கு அவன் காணும் பொருள் யாது? தான் தன்னுடைய புத்தியைச்செலுத்தி, யாதானும் ஒரு கருவியைத் திறமையுடன் பயிலும்வகை தேடிக்கொள்வதே முன்னுக்கு வரும் முயற்சியென்பது அவன் கொள்கையாகின்றது. நா வன்மையால் வழக்காடப்பயில்வதும், மொழி வன்மையால் நூலெழுதப் புகுவதும், அநுபவச் சூழ்ச்சியால் வர்த்தகஞ் செய்வதும், மெய்மிகவருந்தி உத்தியோகத்திலுயர்வதும், இவையனைய பிறவும், வாய்த்தசமயத்தை வறிதேவிடாமல் தனக்கொரு இலாபமாய் முடியும்படி சில கருவிகளைக் கையாளப் பழகியுள புத்தியின் தேர்ச்சியாம். சுயவாராய்ச்சியில்லையாயின் நம்முடைய புத்திக்கு இவை தவிர வேறு பயன் உளதெனும் எண்ணமும் நேர்ந்திடாது. கல்வி என்ற சொல் இப்பொழுது இவ்விதம் கருவிகளைக் கையாண்டு ஒருவன் முன்னுக்குவருவது என்னும் பொருளையே பெரும்பாலோர்க்குத் தந்து நிற்கின்றது. இதற்காகத்தான் நம்பள்ளிக்கூடங்களும் சர்வகலாசாலைகளும் நடைபெறுகின்றன. புத்தியின் இத்தகைய பயிற்சிக்காக நம் சிறுவர்களது தருமசிந்தனையும் தெய்வசிந்தனையும் பலியிடப்படுகின்றன. புத்தியினது தேர்ச்சிக்குரிய பெருமையை நாமிங்கு அவமதிக்கின்றோமென் றெண்ணவேண்டா. மனிதரது நன்மைக்கும் பெருமைக்கும் இயற்கையாயமைந்துள்ள அம்சங்களில் புத்தியும் ஒன்றென்று முன்னரே கூறியிருக்கின்றோம். தருமசிந்தனையையும் தெய்வசிந்தனையையும் தரைமட்டமாக்கிப் புத்திக்கோர் கோபுரங்கட்டுகின்ற கொள்கையே குறையுடைத்து. தருமசிந்தனைக்குமேல் புத்தியின் கூர்மையை உயர்த்தாதிருந்தாலன்றி உய்யமாட்டோம். புத்தியும் தருமமும் ஒன்றையொன்று பின்பற்றி நடப்பது போகத் தரும மென்பதொன் றிருப்பதையே மறந்து அதற்கு எதிராகப் புத்தியைச் செலுத்துவதெல்லாம் பாழும் பறந்தலைக்குக் கொண்டுசேர்க்கும் சாமர்த்தியமாகவே முடியும். சோர்தலின்றிச் செம்மையாய்த் தம் புத்தி வளரவேண்டுமெனுங் கருத்துடையவர் அவ்வளர்ச்சி தருமசிந்தனையையே முதல்ஆதாரமாகக் கொண்டு ஆரம்பிக்கவேண்டுமெனும் அவசியத்தை மறத்தலாகாது. புத்தியின் நேர்மையைச் சாதிப்பதற்குக் கருவிகளைத்திறமையுடையன் பயிலும்தேர்ச்சி மாத்திரம் போதாது. தருமத்திற்கெல்லாம் உயிராய நிஷ்காம்யநிலையை அது தன்னுடைய பயிற்சியால் அடைவதற்கு ஆவன செய்தல்வேண்டும். புத்தியின் முடிவு மெய்ம்மையை அறிதல். ஒரு பயன்கருதித் தேடுவோமாயின் மெய்ம்மையை அடையமாட்டோம், மெய்ம்மையை அதனிற்காகவே தேடுதல் வேண்டும். புத்தியின் வளர்ச்சிக்கு இடம் இந்நிலையிற்றான் இருக்கின்றது. இந்தநிலை நில்லாது விஷயங்களின் அறிவினுல் 'முன்னேற்றம்' அடைவதென்னும் நோக்கத்தோடுச் செலுத்தப்படுகின்ற புத்தி நெறிகெடப் பிறழ்ந்து நெடிதே உழல்வதாகும். காலவேகம் களிமயக்குற்றதெனத் தருமமெனும் தறிமுறித்துத் தெய்வமெனும் பாகெறிந்து, உற்றூர் பெற்றூர் பெருநாட்டார் அலமர, பாறும் பருந்தும் கழுதும் உடன் தொடரச் சென்றவிடமெல்லாம் சிதைத்துவீழ்த்துங் கொடுமையுடையதாய்ப் பற்பலர் புத்தி பாய்ந்தோட நாம் இந்நாள் காண்பதற்கெல்லாங் காரணம் "எனக்கொரு லாபம்; நமக்கொரு பயன்" என்று முறையிடும் முன்னேற்றம் என்னும் மூடியால் மாந்தர் அகத்துள ஒளி இருளடையும்படி மறைந்து கிடத்தலேயாம். இவ்வொளி மறைந்திருப்பதால் புத்திமான்களிற்பலர் தாமே மதிமோசம் போவதுமல்லாது மற்றவரையும் அவ்விருளில் வரவழைத்து ஒருவரோடொருவரை முட்டவிடுகின்றனர். முன்னேற்றமென்னும் இருளே மேலான வொளியென்று வாதிக்கக் கூறும் தம் குதர்க்கங்களில் தாங்களே சிக்கிக்கொள்ளவும் நேர்கின்றது. இராஸயன சாஸ்திரங்களிலும் தத்துவ சாஸ்திரங்களிலும் தம்புத்தியைச் செலுத்தியுள்ள சிலர் தங்கள் சாதுர்யத்தால், மானுட தர்மத்திற்கும் பெருமைக்கும் முத்திக்கும்ஆதாரமான முழுமுதல் மெய்ப்பொருளிற்கே இறுதிகாண இசைந்துளார். மற்று, சாதாரண புத்தியேயன்றிச் சிறப்பொன்று மிருந்திலாதாரிற் சிலர், தருமத்தின்பால் தங்கிய பற்றுடையராகி, அகன்ற அன்பினுலும் நிலைத்த பக்தியாலும் பெருகிவளர்ந்த புத்தியுடையவராதலும் காண்கின்றோம். தன்நயம், எம்நலம் என்னும் படுகுழிகடந்து உயர்ந்தவர்கள்தாம் குணமென்னுங் குன்றேறி நின்றவ ராவர். அத்தகைய உயரத்தில் இருப்பவர்க்குத்தான், உலகத்தின் உண்மையும் விஷயங்களின் தன்மையும் முழுமையாய்த் தென்படும். சுயநயம் என்னும் சுமை அகன்றாலன்றிப் புத்தியானது பரவி வளர்வதற்கு இடமில்லையே. புத்தியின் வேளாண்மைக்குத் தருமமும் தெய்வமும் இன்றியமையாதன. நிஷ்காம்யமாகப் புரிகின்றதருமமே, மெய்ம்மைக் கிடந்தருமாறு மனத்தைத் திறந்துவைக்கின்றது. இவையிரண்டும் ஓரினத்தன. என்றுமுள இவ்விரண்டிற்கும் அலகில்லை, அழிவுமில்லை.

புத்தியின் கூர்மைக்கும் தருமசிந்தனைக்கு முள்ள தொடர்பைக் கருதாமல் யாவரும் விவகரித்து வருவதாலும், முன்னதற்குப் பின்னதைப் பெரும்பாலும் ஜனங்கள் பலியாக்க விடுவதாலும், விளைகின்ற தீமைகளை விரித்துரைக்க இப்பத்திரிகையின் இடமெலாம் போதாது. சாமர்த்தியம் சாமர்த்தியம் என்று ஒன்றைப் பாராட்டி மேன்மைப்படுத்துமிது இக்காலத்தின் சாபமாகும். இதனுல் தருமமும் தெய்வமும் பின்னிடைந்து நிற்க நேர்கின்றன. கலாசாலைக் கல்வியெல்லாம், பல்வகைச் சாமர்த்தியங்களைச் சேகரித்துக்கொள்ள உதவவேண்டுமென்பதே முதல்நோக்கமாக உள்ளும் புறமும் ஊடாடுகின்றது. இதனுல், சேகரித்த சாமர்த்தியம் செம்மைநெறி செல்வதற்கு ஆதாரமாய



மற்ற அம்சங்கள் உடன்வளர வழியின்றிக் கழியவே, அக்கல்வி கற்றோர்க்கும் மற்றோர்க்கும் அல்லலன்றி வேறெதுவும் விளைக்காமலிருப்பது வியப்பன்று. திறமை என்பது தருமத்துடன் சேர்ந்திலையாயின் காட்டுப்பேயை வீட்டிற் கழைத்துவந்த செய்தியாய் முடியும்.

முன்னிங்குரைத்தவைகளால், புத்தியைத் தருமத்திற்கும் தெய்வத்திற்கும் இணங்கியமுறையில் வளர்ப்பது சுயகல்சரின் பகுதிகளி லொன்றென்பது விளங்கலாகும். இராஸயனம்போன்ற பூதசாஸ்திரங்களிலும் சரித்திரம் பூகோளம் போன்ற நூல்களிலும் மொழிப்பயிற்சிக் குரியவைகளிலும்மாத்திரம்தேர்ச்சியுடைவதால் சிற்சில கருமங்கள் செய்யுந் திறமைபெறலாமாயினும் அவ்வளவிலேயே கல்சர் அடைந்தவராக மாட்டோம். இந்தச் சாத்திரங்களி னறிவைக்கொண்டு எந்திரமும் வர்த்தகமும் செய்யுமொருபயனைச் சிந்திப்பதற்குமுன் அச்சாத்திரங்களின் விஷயங்களையெல்லாம் தொகுத்துப் பொதுவுற நிற்குமோர் மெய்ம்மையை உணர்தற்கு நமதுபுத்தி நாடுமாறு அது பயின்றிருத்தல் வேண்டும். தெய்வத்தோடுந் தருமத்தோடும் பழகிமுதிரும் புத்திக்கே இந்நோக்கம் தோன்றுமேயொழியத் திறமையுடன் ஒன்று செய்வதே தலையான கருமம் என்ற நினைவிலேயே ஆழ்ந்திருக்கும் புத்திக்கு அந்நோக்கம் தோன்றுவ தென்பது ஒருபோதுமில்லை. பயன்நினைத்துக் கற்குந்தோறும் இச் சாத்திரங்களெல்லாம், சூறையிற்பட்ட சருகுபோல் மனிதரை ஆகாயத்தில் பறக்கவைக்கலாம், பிரளயத்தில் அகப்பட்ட துரும்புபோற் கடலில் மிதக்கவைக்கலாம், அம்புண்ட விலங்குபோல் தரையில் ஓடவைக்கலாம், கூற்றுவன் மகிழ்ச்சிகூரப் பீரங்கிக்குண்டுகள் பண்ணவைக்கலாம், அவரவர் கழுத்திற்குக் கயிறு மணலிலிருந்து திரித்துக்கொள்ளக் கற்பிக்கலாம், ஆயினும்என்! "பிராக்டிகல் அப்ளிக்கேஷன்" (Practical application) என்றுஒன்றைஎண்ணுது இச்சாத்திரங்களின் முடிவான மெய்ப்பொருளை அடைவதல்லால்பிறநோக்கங்களெல்லாம் பேதைமை என்னும்புத்தியால், அவைகளைக் கற்கும்போதும் பயிலும்போதும் சுயகல்சர் எனும் அவ்வுன்னதநிலைக்குப் படிப்படியாய் ஏறுகின்றவ ராவோம். புத்தி அவ்வாறு அமையாதவரையில் நமக்கு இயற்கையா யிருக்கின்ற ஒரு மாற்றறியாப் பொன்னைக் கரியாக்கிக்கொண்டிருப்பது திண்ணம். இதுவே இக்காலத்தவர் கையாளும் இரஸவாதம். சுயவாராய்ச்சிச் சக்தியைச் சிறிதுஉபயோகப்படுத்தித் தம்மையும் தம்மைக்கொண்டு தம்போல் விவகரித்து வரும் பிறரையும் சோதித்துப் பார்த்தவர்களுக்கு இச்செய்தி இரகசியமன்று. யார் புத்தியில் இது எந்நாள் பட்டதோ அன்றைக்கே அவரது சுயகல்சர் ஆரம்பமாயிற்று.

...THE REG... 192 MADRAS

# அப்பர்

## 6. அப்பர் தேவாரமும் அதன் காப்பிய விலக்கணமும்

[745வது பக்கத் தொடர்ச்சி]

சூரியோதயம் (சூரிய நமஸ்கார கண்டனை)

அங்கதி ரோனவனை யண்ணலாக் கருதவேண்டா
வெங்கதி ரோன்வழியே போவதற் கமைந்துகொண்மி
னங்கதி ரோனவனை யுடன்வைத்த வாதிமூர்த்தி
செங்கதி ரோன்வணங்கும் திருச்சோற்றுத் துறைய [னரே

திருச்சோற்றுத்துறை-திருநேரிசை 8

சந்திரோதயம் (மாலை வழிபாடு)

சுருளுறு வரையின்மேலாற் றுளங்கிளம் பளிங்குசிந்த
இருளுறு கதிர்நுழைந்த விளங்கதிர்ப் பசலைத்திங்கள்
அருளுறு மடியரெல்லா மங்கையின் மலர்களேந்த
மருளுறு கீதங்கேட்டார் வலம்புரத் தடிகளாரே.

திருவலம்புரம்-திருநேரிசை 5

இருசுடர்த் தோற்றம் (உவமை)

காலையிற் கதிர்செய்மேனி கங்குலிற் கறுத்தகண்டர்
மாலையின் மதியஞ்சேர்ந்த மகுடத்தர் மதுவும்பாலும்
ஆலையிற் பாகும்போல வண்ணித்திட் டடியார்க் [கென்றும்
வேலையி னமுதர்வீழி மிழலையுள் விகிர்த னரே

திருவீழிமிழலை-திருநேரிசை 2

நன்மணம் புணர்தல்

(i) உமையவள் திருமணம்:—

பெருந்திரு விமவான் பெற்ற
பெண்கொடி பிரிந்த பின்னை
வருந்துவான் றவங்கள் செய்ய
மாமணம் புணர்ந்து மன்னு
மருந்திரு மேனி தன்பா
லங்கொரு பாக மாகத்
திருந்திட வைத்தார் சேறைச்
சென்னெறிச் செல்வ னரே.

திருச்சேறை - திருநேரிசை 1

(ii) கங்கையின் சம்பந்தம்:—

மையறு மனத்த னுகிப் பகீரதன் வரங்கள் வேண்ட
வையமி லமர ரேத்த வாயிர முகம தாகி
வையக நெறியப் பாய்வான் வந்திழி கங்கையென்னுந்
தையலைச் சடையி லேற்றுர் சாய்க்காடு மேவி னரே.

திருச்சாய்க்காடு - திருநேரிசை 7

பொன்முடி கவித்தல்

தானலா துலக மில்லை சகமிலா தடிமை யில்லை
கானலா தாட லில்லை கருதுவார் தங்க ளுக்கு
வானலா தருளு மில்லை வார்குழன் மங்கை யோடு
மானலா தார்வ தில்லை யையனை யாற னர்க்கே.

திருவையாறு - பண் - திருநேரிசை 1

பூம்பொழி லுகர்தல்

பூச்சூழ்ந்த பொழில்தழுவு புகலூ ருள்ளார்
புறம்பயத்தா ரறம் புரிபூந் துருத்தி புக்கு
மாச்சூழ்ந்த பழனத்தார் நெய்த்தா னத்தார்
மாதவத்து வளர்சோற்றுத் துறையார் நல்ல

*தீச்சூழ்ந்த திகிரிதிரு மாலுக் கீந்து*
*திருவானைக் காவிலோர் சிலந்திக் கந்நாட்*
*கோச்சோழர் குலத்தரசு கொடுத்தார் போலும்*
*குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.*

*திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் - திருத்தாண்டகம் 8*

புனல் விளையாடல்

*செங்கயல் சேல்கள் பாய்ந்து தேம்பழ மினிய நாடித்*
*தங்கயந் துரந்து போந்து தடம்பொய்கை யடைந்து நின்று*
*கொங்கையர் குடையுங் காலைக் கொழுங்கனி யழுங்கி னாரா*
*மங்கல மனையின் மிக்கார் வலம்புரத் தடிக ளாரே.*

*திருவலம்புரம் - திருநேரிசை 7*

*அளித்துவந்தடி கைதொழுமவர் மேல்வினைகெடு மென்றி வையகங்*
*களித்துவந் துடனே கலந்தாடக் காதலராய்க்*
*குளித்துமூழ்கியுந் தூவியுங்குடைந் தாடுகோதையர் குஞ்சி யுள்புகத்*
*தெளிக்குந் தீர்த்தமருத் திருவாரூ ரம்மானே.*

*திருவாரூர் - சீகாமரம் 6*

தேம்பிழி மதுக்களி:—

*(இது சிவநெறியிலுள்ள அடியார்கள் கனவிலும் காணக்கூடாதமையான் வண்டுகள் மதுவுண்பதே பொருந்தும்.)*

*தெண்டிரை தேங்கி யோதம் சென்றடி வீழுங் காலைத்*
*தொண்டிரைத் தண்டர் கோனைத் தொழுதடி வணங்கி யெங்கும்*
வண்டுகள் மதுக்கள் மாந்து வலம்புரத் தடிக டம்மைக்
கொண்டுநற் கீதம் பாடக் குழகர்தா மிருந்த வாறே.

*திருவலம்புரம் - திருநேரிசை 1*

சிறுவரைப் பெறுதல்

**குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள் தாதை யென்று**
**நறவின நறுமென் கூந்தல் நங்கையோர் பாகத் தானைப்**
**பிறவியை மாற்று வானைப் பெருவேளூர் பேணி னானை**
**யுறவினால் வல்லனாகி யுணருமா வுணர்த்து வோமே.**

*திருப்பெரு வேளூர் - திருநேரிசை 3*

புலவியிற் புலத்தல் :—

*உறவு பேய்க்கண முண்பது வெண்டலை*
*யுறைவ தீம முடலிலோர் பெண்கொடி*
*துறை களாகடற் றோணி புரத்துறை*
*யிறைவ னார்க்கிவ ளென்கண்டன் பாவதே*

*திருத்தோணிபுரம் - திருக்குறுந் தொகை 8*

கலவியிற் களித்தல்

*ஊச லாமர வல்குலென் சோர்குழல்*
*ஏச லாம்பழி தந்தெழில் கொண்டன*
*ரோசொ லாய்மக ளேமுறை யோவென்று*
*பூசல் நாமிடு தும்புக லூரர்க்கே.*

*திருப்புகலூர் - திருக்குறுந்தொகை 3*

மந்திரம் (*தக்ஷிணாமூர்த்தியான காலத்தில் தேவர் மந்திராலோசனை, அதன் பயனாற் காணப்படும்*)

*கழைபடு காடுதென்றல் குயில்கூவவஞ்சு*
*கணையோனணைந்து புகலு*
*மழைவடி வண்ணனெண்ணி மகவோனைவிட்ட*
*மலரானதொட்ட மதன*
*னெழில்பொடி வெந்துவீழ விமையோர்கணங்க*
*ளெரியென்றிறைஞ்சி யகலத்*
*தழல்படு நெற்றியொற்றை நயனஞ்சிவந்த*
*தழல்வண்ணனெந்தை சரணே.*

*தசபுராணம் - பண் - பழம்பஞ்சுரம் 9*

தூது செலவு (*நந்தியம்பெருமான் தடை*)

*தோற்றினா னெயிறுகவ்வித் தொழிலுடை*
*யரக்கன்றன்னைத்*
*தேற்றுவான் சென்றுசொல்லச் சிக்கெனத்*
*தவிருமென்று*
*வீற்றினை யுடையனாகி வெடுவெடுத்*
*தெழுந்தவன்ற*
*னாற்றலை யழிக்கவல்லா ரவளிவ*
*ணல்லூராரே*

*திரு அவளிவணல்லூர் - திருநேரிசை 1*

இகல்

*வெம்பனைக் கருங்கையானை வெருவவன் றுரிவை போர்த்த*
*நம்பனைக் காலாற்காய்ந்த காலனை ஞாலமேத்து*
*மும்பனை யும்பர்கோனை நாகைக்கா ரோணமேய*
*செம்பொனை நினைந்தநெஞ்சே திண்ணநா முய்யுமாறே*

*திருக்கடனாகை காரோணம்-திருநேரிசை 6*

வென்றி

*இந்திரன் பிரமனங்கி யெண்வகை வசுக்களோடு*
*மந்திர மறையதோதி வானவர் வணங்கிவாழ்த்தத்*
*தந்திர மறியாத்தக்கன் வேள்வியைத் தகர்த்தனான்று*
*சந்திரற் கருள்செய்தாரும் சாய்க்காடு மேவினாரே*

*திருச்சாய்க்காடு-திருநேரிசை 5*

*இவ்வாறு தண்டியாசிரியர் பெருங்காப்பியச் சூத்திரத்திற் கூறிய அங்கங்கள் யாவும் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் அமையப்பெற் றிருக்கின்றன. எட்டுவகைச் சுவையும், மெய்ப்பாட்டுக் குறிப்பும் இடைவிடாமற் கேட்டுவக்கும் கற்றோர் மதிக்க, அவர்பதிகங்கள் சொலிக்கா நிற்கும்.*

*இத்தேவாரத் தலைவன் இறப்பும்பிறப்பும்அற்றவனாதலின், இளமை முதலிய பருவங்களைக் காட்ட இயலாது. இத்தகையவன் திருவிளையாடல்களைச் செய்யும் பதிகங்கள் சிவபராக்கிரமத்தைப் பலவகையாகக் காட்டுஞ் சரித்திரங்கள் போலாம். இதன்றியும் மலத்திலழுந்திய ஜீவனை அம்மலநீக்குவான் இத்தலைவன் செய்யும் தொழில்களின் சரித்திரமே தேவாரமெனினும் பொருந்தும்.*

*திருநாவுக்கரசுநாயனார் திருவாய்மலர்ந்த மூன்று திருமுறைகளும் யாதொரு சரிதையையும் விவரமாய் எடுத்துக்காட்டி முடிக்காவிடினும், ஆதியும் அந்தமுமில்லா முழுமுதற்கடவுள் சேதிக்கு, எதுவும் ஆரம்பம் எதுவும் முடிவென்றில்லாமல், பற்பல காலங்களிலும் ஜீவகோடிகளைத் திருநெறிகாட்டிச் சிவலோக வழிதரும் செய்கைகளே முதலினின்று இறுதிவரையிற் கூறப்படும்.*

*"கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமை பல செய்தன நானறியேன், ஏற்றாயடிக்கே யிரவும் கபலும் பிரியாது வணங்குவன்" என்ற முதலுடன்*

***மேலு மறிந்திலன் நான்முகன் மேற்சென்று கீழிடந்து***
***மாலு மறிந்திலன் மாலுற்ற தேவழி பாடுசெய்யும்***
***பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி மறிந்தசிந்தைக்***
***கால னறிந்தா னறிதற் கரியான் கழலடியே.***

*என்னும்அத்திருமுறை ஈற்றுப்பாசுரத்தையும் ஒன்று சேர்த்து நோக்குக. அவ்வாறே:—*



*அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்*
*பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை*
*யென்னம் பாலிக்கு மாறுகண் டின்புற*
*வின்னம் பாலிக்கு மோவிப் பிறவியே*

*என்று ஆரம்பித்த திருமுறை*

*அரக்கன் வல்லரட் டாங்கொழித் தாருள்*
*பெருக்கச் செய்த பிரான்பெருந் தன்மையை*
*யருத்தி செய்தறி யப்பெறு கின்றிலர்*
*கருத்தி லாக்கய வக்கணத் தோர்களே*

*என்று முடிந்தது. எஞ்சிய திருமுறையின் ஆதியந்தம் சற்று நோக்கு வோம்:—*

*அரியானை யந்தணர் தஞ்சிந்தை யானை*
*யருமறையி னகத்தானை யணுவை யார்க்குந்*
*தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்*
*திகழொளியைத் தேவர்கடங் கோனை மற்றைக்*
*கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்*
*கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற*
*பெரியானைப் பெரும்பற்ற புலியூ ரானைப்*
*பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.*

*என்று ஆரம்பித்து,*

*ஒருவனையு மல்லா துணரா துள்ள*
*முணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற*
*விருவரையு மூவரையு மேன்மே லேவி*
*யில்லாத தரவறுத்தாய்க் கில்லே னேலக்*
*கருவரைசூழ் கான லிலங்கை வேந்தன்*
*கடுந்தேர்மீ தோடாமை காலாற் செற்ற*
*பொருவரையா யுன்னடிக்கே போது கின்றேன்*
*பூம்புகலூர் மேவிய புண்ணியனே,*

*என்று முடிவதைக் காண்க. இவ்வாறு திருமுறைகள் தொகுத்த நம்பியாண்டார்நம்பிகளுக்குச் செய்யும் கைம்மாறுண்டோ ?*

*அப்பர் திருப்பதிகங்கள் காப்பிய இலக்கணவங்கங்களிற் சிறிது குறைந்திருக்குமெனினும், தண்டியாசிரியர் விதியை நோக்குக:—*

*"கூறிய உறுப்பிற் சிலகுறைந் தியலினும்*
*வேறுபா டின்றெனா விளம்பினர் புலவர்"*

*என்றதனால், அப்பர் திருமுறைகள் சிவபுராணப் பெருங்காவியமெனக் கொள்ளலாகும்.*

# குலசேகரர்.

[743-வது பக்கத் தொடர்ச்சி]

## பிறவி வேண்டுந் துறவி.

*செடியாய வல்வினைகள்*
*தீர்க்குந் திருமாலே*
*நெடியோனே வேங்கடவா*
*நின்கோயி லின்வாசல்*
*அடியாரும் வானவரும்*
*அரம்பையரும் கடந்தியங்கும்*
*படியாய்க் கிடந்துனது*
*பவளவாய் காண்பேனே* 9

வல்வினை

*நாம் செய்வனவும் சொல்வனவும் எண்ணுவனவும் நமது உள்ளத்தே நம்மையும்அறியாது நிழலிடுகின்றன. அந்நிழலோ, அழியா நிலைபெற்று விளங்குகின்றது. அந்நிலையில் அது வலியதாகும். நாம் யாதேனும் ஒன்றைச் செய்யப்புகுந்தால் முன் நம் மனதில் நிழலாய் விழுந்தவையனைத்தும் நம் செயலை மாற்றி யமைக்கின்றன. முன்னரே ஒரு முறை அச்செயலைச் செய்திருப்பானாயின் பின்னர் அதனைச் செய்வது ஒருவனுக்கு எளியதாகின்றது. முன்னர் எண்ணிய எண்ணங்களும் பேசிய பேச்சுக்களும் அங்ஙனமே உதவுகின்றன. உள்ளம் எங்ஙனம் இயக்குகின்றதோ அங்ஙனமே நம் உடல் இயங்குகின்றது. உள்ளமோ, பழைய எண்ணம் செயல் பேச்சு என்பவற்றின் மணம்போகாத வொரு பெருங்காயக் குடுக்கையாகும். நமது செய்வினையனைத்தும் அவ்வுள்ளத்தை மாற்றியமைப்பதால் அவ்வுள்ளத்தின் இயக்குமுறையும் அதற்குத் தக மாறிவிடுகின்றது. நம்மறிவும் நுகர்வும் செயலும் முன்னைய நிலைமைக்குத் தக்கதாகவே இருக்கின்றன. வினையின் பயனை வினை என்று பேசத்தொடங்கினர். நல்வினையினும் தீவினையே வலியதாகும்.*

செடி

*முட்செடி முதலியவைகளைப் போன்று புதாராகச் சுற்று முற்றும் விரைந்து பரவுவன வல்வினைகள். ஒரு தீய தொழிலினைச் செய்வதென்றால் முதலில் உள்ளம் உடன்படுவதில்லை. ஆனால் ஒருமுறை செய்தபின் அவ்வழக்கத்தால் மறுமுறை செய்துமுடிப்பது எளிதாகின்றது. தீமையானது, இவ்வாறு உள்ளத்தே ஊறிஊறி வலிவடைகின்றது; பெருநோ யாகின்றது.*

தீர்க்குந்திருமால்

*கண்டவரை மால்கொள்ளச் செய்யும் கடவுளது அருள் வடிவாம் அழகினை எண்ணி உள்ளம் மாறி உண்மையன்புஉருவினரானால் மருந்துபாய்ந்த உடலினின்றும் நோய் பறந்தோடுதல்போல் வல்வினைகளும் பறந்தோடுகின்றன. மருளாடிப் பேயும் நோயும் ஓட்டுவாரைப்போல, அருள்ஆடி உள்ளத்துப் பேயினையும் உள்ளத்து நோயினையும் ஓட்டுகின்றான் ஆண்டவன். உள்ளம் மாறுதலே வேண்டப்படுவது. வல்வினையின் வழக்கம் இருள்போலப் பரவியிருந்த உள்ளத்தே அருளாளனின் மால்வடிவம் ஒளியாகப் பரத்தல் வேண்டும்.*

நெடியோன்

*வல்வினைகிடந்த வலிய உள்ளத்தே அடியார்க்கடங்கி ஒருகுறியனாய் உட்புகுவான். ஆனால் அவனே உள்ளத்தையும் உலகத்தையும் கடந்துநின்ற நெடியனாவன்; வல்வினையையும் கடந்து நீண்டவனாவான்.*

வேங்கடவா

*நீண்டவனது நெறிநின்றால் அவர், நெஞ்சத்தே வந்து நிலைத்தலை நமக்கு அறிவுறுத்த, நம்மெதிரே கைக் கெட்டிக் கண்ணுக்கெட்டித் திருமலையாய் நீண்டான். அவனுடைய அழியாப் பெருங் கோ*

யிலினுள்ளே யாரே வாராதவர்? எல்லாமாய இறைவனிடத்தே எல்லாப் பொருளும் இயங்குகின்றன. நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநிலையாய் நின்றவன் அவனேயன்றோ? அன்பு வடிவானவரும், அவா வடிவானவரும் அவனை எண்ணி அவ்விடம் புகுகின்றனர். தீதில் நன்னெறி நிற்கவே வேண்டுவேன். அவா வாய்ப்பட்டு அவனை அடைவாரோடு அளவளாவுவதில்லை. எத்திறத்திலும் யாரொடும் கூடுவதில்லை. ஆனால் ஆண்டவன் திறத்தில் யாரொடும் கூடுவேன். இவ் வேழைமாக்களும் இறைவா என்றால் இவர்களை என் முடிமேல் ஏந்திக்கொள்வேன். இறைவன் இன்னோர்க்குமேலும் உயர்ந்துநீண்டு இன்னார் இனியார் என்னாது இன்பமழை பொழிவதுபோல,யானும் இன்னோர்க்குக் கீழே இழிந்து இன்னார்இனியார் என்னாது, இவர்களது அடித்துகளில் மூழ்கிக் குளிப்பேன்.

அடியவரே அன்பு நிலையினர். உலக இன்பத்தின் எல்லையாவது வானுலக இன்பமேயாம். பெரியோர் இன்பமெனப் புலவன் களுக் கண்டதனை வானுலகம் என வழங்கலாயினர். அவாநெறி நின்றவர்கள் வேண்டுவது அத்தகைய இன்பமேயாம். அவ்வாறு வானுலக இன்பத்தை வேண்டிநிற்பார் இறைவனருள் பெற்றபோது வேண்டிய வேண்டியாங் கெய்துதலால் மண்ணவரும் வானவராகின்றனர். உலகினர்கள் அவா வழியாக ஆண்டவனை யடைந்தபோது அவா நிறைவேறப்பெற்று ஆண்டவனையும் அடைகின்றனர். ஆதலின் அவர்களை வானவர் என்றும் அரம்பையர் என்றும் வழங்கலாம் அன்றோ? அன்புநிலைநின்ற அடியார் வழிபட அவரடி தொழுவேன். இன்பநிலை நின்ற வானவர் வழிபட அவரடி தொழுவேன். அழகு நிலைநின்ற அரம்பையர் வழிபடஅவரடி தொழுவேன். இதற்குமாறாக வானவரது செல்வப் பொலிவாம் அழகினையும், அரம்பையர் இன்பத்தையும் வேண்டி நிற்பவனல்லேன். ஆனால் அன்னோர் தத்தமக்குப்பொருந்திய நிலையில் நின்றபோது, அவர்களது இன்ப நிலையும் அழகுநிலையும் இறைவன்வழிபாட்டால் பொலிவுபெற்றபோது, அவர்களுடைய அடித்துகளாய் ஆராவின்பம் துய்ப்பேன்.

முன்பாட்டில்,நெறியாய் நிற்கவேண்டினேன். நெறியாய் நின்றால் அடியாரனைவர்க்கும் பயன்படுதல் ஒருதலையாக இல்லை. மலையோ பெரிதாதலின் அதனுயரச் செல்லும் நெறியும் பலவாகலாம் அன்றோ. உலகினர் அனைவரும் ஒருவழியே போவர் என்பது என்றும் இல்லையே. ஆனால் கோயிலின் உள்வாயிற்படியாய் அமைந்தால் அதைத் தாண்டாது இறைவனை எவரும் காண இயலாது. ஆதலின் அப்படியாய் நின்று அனைவர்க்கும் பயன்படுவேன். தொண்டரடிப் பொடியாட நான் பெறுவேன்; செவ்விய திருவாயின் சீரழகைக் கண்டுகொண்டே நிற்பேன். அலையாத உள்ளத்தோடு அசைவின்றி அல்லும்பகலும் அவனருகே, அறிதுயில் நிலையில் அமர்வேன். [திருமாலின் கோயில்களில் உள்வாயிற்படி "குலசேகரப்படி" என வழங்கப்படுகிறது. ஆழ்வாரின் வேண்டுகோள் நிறைவேறிவிட்டது போலும்]

உம்ப ருலகாண்டு ஒருகுடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற் கலையல்குல் பெற்றாலு மாதரியேன்
செம்பவள வாயான் திருவேங்கட மென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனு மாவேனே

மேலுலக மனைத்திற்கும் ஒரு தனியரசனாய் ஒப்பற்றதொரு வெண்கொற்றக் குடைக்கீழ் வீற்றிருந்து அரசாளும் செல்வம் பெறினும் யான் வேண்டேன்.வானர மகளிரின் தலைவியாகிய உருப்பசி அழகிற் சிறந்தவள். அவ்வழகுக் கழகு செய்ததுபோன்ற அழகிய பொன்னாடையணிந்த நல்லிடையாளின் இன்பமனைத்தும் பெறினும் யான்வேண்டேன்,செல்வமும் வேண்டேன்,அதற்கேற்றஇன்பமும்வேண்டேன்.

வானவரது பெருமை இறைவனது வழிபாட்டால் நிறம்பெற்றபோது அவர்களது திருப்பணியில் மால் கொண்ட உள்ளத்தனாய் அன்னாரை வழிபடுவேன். ஆனால் அவர்களது மற்றைய பொய்ச்செல்வத்தினை ஒருபொருளாக எண்ணேன். ஏரெழிலோடு விளங்கும் இளமங்கையர் ஆண்டவன் வடிவெனும் அழகு நிலை நின்று அவன் வழியாகிய அறவழியில் இன்ப அன்போடு இல்லறம் நடத்தினால் இறைவனும் அருள் செய்வான்; அந்நிலையில் அவரடி வீழ்ந்து வணங்குவேன். ஆனால் அவர்களைக் காதற் கழிவிடமாகக் கருதேன்.

அரச செல்வமாவது குடையும் கோலுமாம் வெளிப்பகட்டே யன்றோ? உருப்பசி இன்பமாம் உடையும் இடையும் வெளிப்பகட்டே யன்றோ? உள்ளூறப்பாயும் இன்பம்இறைவனது இயற்கையின்பமேயாம். அடியவரோ கருவானத்தின் பெருநிழலில் வாழ்வார். அரசனோ ஒரு குடையின் சிறுநிழலில் வாழ்வான். அடியவரோ, பெண்ணழகைப் பெருமாள் வடிவாகக் காணும் கண்படைத்தவர்கள். அரசரோ, பெண்களில் உள்ளத்தும் உடலிலும் ஒளிர்கின்ற ஒப்பற்றவனைக் காணாது அவர்களது உடலின் உறுப்புக்களைக் காதற் கழிவிடமாகக் கருதிக் காலம் கழிப்பர்.

செக்கச்சிவந்த திருவாயினையுடைய மாதரின் அழகையெல்லாம் எம்பெருமானது செம்பவள வாயிலே காணலாம் அன்றோ? அவ்வாயில் அன்றோ அருள் ததும்புகின்றது.

அப்பிறவிவேண்டும் இப்பிறவிவேண்டும் என அடியேன் மன்றாடுவது ஏன்? படியாய்க் கிடப்பதும் பண்பன்று. அழகினையறியாத செல்வச் செருக்கினர், கல்லினையிகழ்ந்து கற்படியைப் பொற்படியாக்கப்புகினும் புகுவர் [காசிக்கோயிலில் செல்வவான்கள் கல்லிற் பொன்னைப்புதைத்துவைத்துப்பாழாக்கியிருப்பதைப் பற்றிக் காந்தியடிகள் முறையிடுகின்றனர் அன்றோ?] பொன்னால் மூடப்பெற்றால் உள்ளேகல்லாய்க்கிடந்து சிறையிருந்து கடவுளைக்காணாது கதறவேண்டி வருமன்றோ? அம் மலைமுழுதும் அவன் பொலிவு பெருக்கெடுத்தோடுவதால் அம்மலை பொன்மலையே என்பதையுணராது, 'மைடாஸ்' போன்றவர் எங்கும் பொன் வேய்ந்தாலும் வேய்வர். ஆதலின் படியாதலும் அடியவரின் பாங்கன்று.?

ஒவ்வொரு பொருளையும் எண்ணிஎண்ணிக் கழித்துக் கொண்டே போதலால் பயன் என்ன? எல்லாம் அறிந்த இறைவன் யான் ஏதாகவேண்டும் என்பதை அறியானோ? ஏதேனும்அம்மலைமேல் ஆவேன்.யானும் அறியவேண்டா; திருமலை யுடையானும் அறியவேண்டா; திருமலையிலே யுள்ளதொருபொருள் ஏதுவாயினும் அமையும். சிறு துகளேயாயினும் ஒன்றே; பெருமாளே யாயினும் ஒன்றே."



மீனாகவும் குருகாகவும் பிறக்கவேண்டுவதெல்லாம் வீடுபெறற்குரிய பாங்காய பழவடியாராக விளங்கவேண்டியே என்பதனைக் கடைசிப் பாட்டு நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

மாடாக நிழற்று செழுமரனாகத் தவச்சிறிய
பூடாகக் குழைத்த நறும்புத லாக வழிப்படுமோ
ரோடாகப் பெறுவ மெனிலுயிர்காள் நற்கதிபெறலாம்
வீடாகத் திருநெறிமால் வீற்றிருக்கும் வேங்கடத்தே

என்று பின் வந்த வீரராகவமுதலியார் தமது திருவேங்கடக் கலம்பகத்தில் கூறிய கருத்துடைய இத்திருமொழியைப் படித்தவர்களும் அடியவரே யாவர். இங்ஙனம் ஆழ்வாரே உறுதி கூறுகின்றனர். இத்திருமொழியின் உண்மைப்பொருள் உணர்ந்தவரே இவ்வுறுதியுடையவர் ஆவர். மற்றவர்கள் இத்திருமொழியைப் பிதற்றுரை எனஇகழ்வர். ஆழ்வார்க்கிருந்த உறுதியை என் என்பது.

மன்னிய தண்சாரல் வடவேங்கடத் தான்தன்
பொன்னியலும் சேவடிகள்காண்பான் பரிந்திறைஞ்சிக்
கொன்னவிலும் கூர்வேல் குலசேகரன் சொன்ன
பன்னியநூல் தமிழ்வல்லார் பாங்காய பத்தர்களே.

## தமிழ்ப் பாடம் 91.

[ அஷ்ட பிரபந்தம். ]

[ 750-வது பக்கத் தொடர்ச்சி ]

### திருவரங்கத்துமாலை.

ஓங்கார வட்டத்து மாசுணப் பாயி
லுலோகமுண்ட
பூங்கார் விழிக்குப் புலப்பட்ட தாலெப்
பொழுதுமென்னை
நீங்கா திடர்செய்யுந் தீவினை காளினி
நின்றுநின்று
தேங்காது நீருமக் கானிடத் தேசென்று
சேர்மின்களே. 14.

பதப்பிரிவு:—ஓம்காரம் வட்டத்து மாசுணம் பாயில் உலோகம் உண்ட பூ கார் விழிக்கு புலப்பட்டது ஆல் எ பொழுதும் என்னை நீங்காது இடர் செய்யும் தீ வினைகாள் இனி நின்று நின்று தேங்காது நீரும் அ கான் இடத்தே சென்று சேர்மின்கள் ஏ.

பதவுரை

ஓங்காரம் - பிரணவ வடிவமான, வட்டத்து- விமானத்துள், மாசுணம் - ஆதிசேடனாகிய, பாயில் - படுக்கையின்மேல், உலகம் - உலகங்களை, உண்ட-உண்ட பூ - அழகிய, கார் - கருமேகம் போன்ற திருமால், விழிக்கு - என்னுடைய கண்களுக்கு, புலப்பட்டது- தெரிவதாயிற்று, (ஆகையால்)

எப்பொழுதும் - எப்பொழுதும், என்னை -என்னைவிட்டு, நீங்காது - அகலாமல், இடர்செய்யும் - துன்பத்தைச் செய்கின்ற, தீவினைகாள் - என் கொடிய வினைகளே, இனி - இனிமேல், நின்று நின்று - என்னுடன் இருந்து இருந்து, தேங்காது - தேங்கிக்கிடக்காமல், நீரும் - நீங்களெல்லாரும், அ - அந்த, கான் இடத்தே - காட்டிற்கு, சென்று - போய், சேர்மின்கள் - சேருங்கள்.

விரிவுரை:—கார், என்பது இங்கு உவமைஆகு பெயராய்த் திருமாலைக் குறிக்கின்றது. "உலகமுண்ட அப்பெருமாளையே நான், திருவரங்கத்தில் பாம்பணையில் இங்குப் படுத்திருக்கக் கண்டுவிட்டேன். இனித் தீவினைகள் என்னோடு தொடர்பற்று ஓடிவிடவேண்டும்" என்று துணிந்த கவி அத்தீவினைகளைக் கூப்பிட்டு "ஏ தீவினைகளே, நீங்கள் இதுகாறும் என்னைவிட்டுப் போகாமல் கும்பல் கூடிக்கூடி எனக்குத் துன்பம் விளைத்துவந்தீர். இன் உம் காசு என்பால் செல்லாது. ஆகையால், செல்வாக்கு இழந்தவர்கள் காட்டிற்குப் போய்விடுவதேபோல் நீங்களும் காட்டிற்குப் போய்ச் சேர்ந்துவிடுங்கள்" என்று துரத்திவிடுகின்றார்.

வலைப்பால் விடம்பிணைக் கண்ணியர் போகத்தின்
மாலுறுமென்
தலைப்பாற் கழலரு டாரரங் காபல
தாயர்தந்த
முலைப்பாற் கடலுன் றிருக்கழ லாணிவெண்
முத்தெறியு
மலைப்பாற் கடலி னளவா மெனின்மற்
றதுவுமன்றே 15.

பதப்பிரிவு:—வலை பால் விடம் பிணை கண்ணியர் போகத்தில் மால் உறும் என் தலைப்பால் கழல்அருள் தார் அரங்கா பல தாயர் தந்த முலை பால் கடல் உன் திரு கழல் ஆணி வெள் முத்து எறியும் அலை பால் கடலின் அளவு ஆம் எனின் மற்று அதுவும்அன்றே.

பதவுரை

தார் - துளவமாலை யணிந்த, அரங்கா - திருவரங்கநாதனே, (எனக்குச் சன்மந்தோறும்) பல - பற்பல, தாயர் - தாய்மார்கள், தந்த - கொடுத்த, முலைப்பால்- முலைப்பாலையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்துக் கருதவேனாயின், கடல் - அந்தக்கடலானது, உன் - சயனம்செய்யும் உனது, திரு - அழகிய, கழல் - பாதங்களில், ஆணி - சிறந்த, வெள் - வெண்மையான, முத்து - முத்துக்களை, எறியும் - வீசுகின்ற, அலை - அலைகளையுடைய, பால்கடலின் - பால்கடலினது, அளவு - அளவு, ஆம் எனின் - ஆகுமோ என்றால், மற்று - மற்று, அதுவும் - அப்பாற்கடலும், அன்றே- ஆகாதே; (இப்படித்தொடர்ந்துவரும் பிறவியினின்று நீங்க என்செயலால் ஆவது இனி யாதொன்றுமில்லை; ஆகையால்)

வலை - ஆடவர்களைக் கவர்வதால் வலைபோலும், பால் - இனியநோக்கு இருப்பதால் அமிர்தம்போலவும், விடம் - ஆடவர்களைவருத்துவதால் விஷம்போலவும், பிணை - மருண்டபார்வையால் பெண்மான் கண் போன்றும் இருக்கின்ற, கண்ணியர்-கண்களை உடைய மாதர்களது, போகத்தில் - சிற்றின்பத்தில், மால் உறும் - மயங்கிக்கிடக்கும், என் - என்னுடைய,

தலைப்பால் - தலையில், கழல் - உன்னுடைய பாதங்களை, அருள் - வைத்தருள்வாய்.

விரிவுரை:—எண்ணில் பல்கோடிஜன்மங்கள் தான் எடுத்திருப்பதை நினைத்துக்கொள்கின்றார் கவி. அந்த அந்தச் சன்மத்தில் அந்தவந்தத் தாய் தனக்குக் கொடுத்திருக்கக்கூடிய பாலையெல்லாம் ஒன்றாய்த் திரட்டித் தன் மனக்கண்ணால் பார்க்கும்போது அவ் வெள்ளம், நெடுமால் பள்ளிகொள்ளும் திருப்பாற் கடலினும் பெரியதாய்க் கவிக்குத் தோன்றுகின்றது. இவ்வாறு ஈறிலாது இறந்தும் பிறந்தும் படுகின்ற தொல்லையினின்று தன்னை நீக்கி முத்திதந்திடுமாறு தன் தலைமேல் பாதங்களைவைத்து அருளக் கடவுளை வேண்டுகின்றார்.

கரணந் தவிர்ந்து விழிபோய்ச் சுழன்று
கலங்குமென்றன்
மரணந் தனில்வந் துதவுகண் டாய்கொற்ற
வாளியொன்றால்
அரணங் கடந்தவன் காணு வரங்கவென்
னாருயிர்க்குன்
சரணஞ் சரண மொழிந்தில்லை வேறித்
தராதலத்தே. 16.

பதப்பிரிவு:—கரணம் தவிர்ந்துவிழிபோய் சுழன்று கலங்கும் என்தன் மரணம்தனில் வந்து உதவு கண்டாய் கொற்றம் வாளி ஒன்றால் அரணம் கடந்தவன் காணு அரங்க என் ஆர் உயிர்க்கு உன் சரணம் சரணம் ஒழிந்து இல்லை வேறு இ தராதலத்து ஏ.

பதவுரை.

கொற்றம் - வெற்றிபொருந்திய, வாளி ஒன்றால் - ஓர் அம்பினால், அரணம் - மூன்று மதில்களை, கடந்தவன் - வென்றவனாகிய சிவபிரானும்,காணு - காணாத, அரங்க - திருவரங்கநாதனே,

என் - என்னுடைய, ஆர் - அருமையான, உயிர்க்கு - உயிரிற்கு, உன் - உனது, சரணம் ஒழிந்து - திருவடிகள் தவிர, சரணம் - அடைக்கலம், வேறு - வேறு, இல்லை - இல்லை, (ஆகையால்)

கரணம் - ஐம்பொறி முதலியன, தவிர்ந்து - தம் செயலை ஒழிந்து, விழி - பார்வை, போய் - மங்கிப் போய், சுழன்று - சுழல்வதாகி, கலங்கும் - கலங்குகின்ற, என்தன் - என்னுடைய, மரணந்தனில் - மரணகாலத்தில், வந்து - நீ வந்து, உதவுகண்டாய் - உதவிசெய்து அருள்வாயாக.

விரிவுரை:—எத்தகையினோரும் தம்முடைய அந்தியகாலத்தில் திருவரங்கனை நினைத்தழைத்து அவன் பாதங்களில் அடைக்கலம் புகுவாராயின் அவர் வினை நீங்கி முத்திபெறுவர். எனினும் இருந்த நாளெல்லாம் அவன்பால் கருத்தில்லாராய் விவகரித்தவர்க்கு மரணகாலத்தில் அரங்கனை அழைக்கவேண்டுமெனும் மனம்வராது; உலகவாதனைகளே அவர்களைச்சூழ்ந்து கொள்ளும். சீலமுடையவர்க்கே அந்தியநேரத்தில் எமன் வந்திழுக்கும்போது திருவரங்கப்பெருமானை மனத்தால் நினைக்கவும் வாயால் அழைக்கவுங் கூடும். சீலம் மிகுந்தவராயினும் பிள்ளைபெருமாள் ஐயங்கார் அந்தியத்தில் அரங்கனை நினைக்கும் தகுதி தனுக்கு உண்டோ இல்லையோ என்னும் சங்கையுடையாராகி, 'முன்சாக்கிரதையாக' அப்போதைக்கு இப்போதே சொல்லிவைப்பவ ராகின்றார்.

"துப்புடையாரை யடைவதெல்லாம் சோர்விடத்துத் துணையாவரென்றே, ஒப்பிலேனாகிலு நின்னடைந்தேன் ஆனைக்கு நீஅருள் செய்தமையால், எய்ப்பென்னை வந்து நலியும்போது அங்கேது நானுன்னை நினைக்கமாட்டேன், அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே" என்ற பாசுரத்தின் கருத்தை இச்செய்யுள் உட்கொண்டுளது.

## இலக்கணம்.

உயிரீற்றுச் சொல், உயிர்முதல் சொல், என்னும் தன்மையை உணர்த்தினோம். நிலைமொழி யிறுதியிலுள்ள உயிர், வருமொழி முதலிலுள்ள உயிரோடு எவ்வாறு புணரும் என்பதை அறிய நாம், அவ்விரு மொழிகளும் என்னதொடர் ஆகின்றன என்பதையேனும், வருமொழிமுதல் இருக்கும் உயிர் பன்னிரண்டு உயிரெழுத்துக்களில் எந்த எழுத்து என்பதையேனும் கருதவேண்டியதில்லை என்றும் பொதுவாகக் கூறினோம். இவைகளை நினைவில் வைத்துக் கொண்டு புணர்ச்சிவிதிகளைப் பார்ப்போம்.

I நிலைமொழி யிறுதியில் இ ஈ ஐ என்ற மூன்று உயிர்களில் எதுவேனும் ஒன்று இருந்து, வருமொழி முதல்உயிர், அ முதல் ஔ வரையிலுள்ள பன்னிரண்டில் எதுவாயிருப்பினும், இவ்விரு உயிர்களும் புணரும்போது இடையில் ய் என்னும் மெய்யெழுத்து வரும். வந்த அந்த ய் என்னும் மெய்யெழுத்தின் மேல் (வால்யூம் 2, 612, 631 பக்கங்களில் சொல்லிய விதிகளின்படி) வருமொழி முதலிலுள்ள உயிர் ஏறிவிடும். உதாரணம்:—

கிளி + அழகு = கிளியழகு —இதனில் கிளி என்னும் நிலைமொழியின் யிறுதியில் ஒலிக்கின்ற உயிர் இ, வருமொழி முதலில் உள்ள உயிர் அ, இவை இரண்டும் புணரும்போது கிளி ய் அழகு என ய் என்னும் மெய் வர, அந்த ய் என்னும் மெய்யின்மேல் வருமொழி முதலிலுள்ள அ என்னும் உயிரேறி, ய என ஆயிற்று. ஆகவே, கிளியழகு, எனவரும். இப்படியே, நிலைமொழி யிறுதியில் இ என்னும் உயிரிருக்க, வருமொழிமுதலில் எந்த உயிர் வந்தாலும் ய் என்னும் மெய்யெழுத்தே இடையில் இவைகளைச் சேர்த்து வைக்கும் பொருட்டு வரும்:—

மணி + ஆட்டம் = மணியாட்டம். பகழி + இட்டான் = பகழியிட்டான். குருவி + ஈட்டம் = குருவியீட்டம். இரவி + உதித்தது = இரவியுதித்தது. சொல்லி + ஊடினாள் = சொல்லியூடினாள். கரடி + எழுந்தது = கரடி யெழுந்தது. மதி + ஏது = மதியேது. மணி + ஒளி = மணியொளி. நதி + ஓடியது = நதியோடியது. கல்வி + ஔவியம் = கல்வி யௌவியம்.

இப்படியே, ஈ என்னும் உயிரின் முன்னும் ஐ என்னும் உயிரின் முன்னும்,வருமொழிமுதலில் அ முதல் ஔ ஈறாக பன்னிரண்டு உயிர்களில் எது வரினும் ய் என்னும் மெய்யெழுத்து வர அதன்மேல் வருமொழி முதல் உயிர் ஏறுவதாகும்:—

தீ + அவிந்தது = தீயவிந்தது. நீ + ஏகு = நீயேகு ஈ + ஓடும் = ஈயோடும், முதலியன.

மனை + எய்தினன் = மனையெய்தினன். பொன்னை உருக்கினன் = பொன்னையுருக்கினன். கருணை + இல்லை = கருணையில்லை. வேதங்களை + ஓதினன் = வேதங்களையோதினன். அவளை + ஔ = அவளையோ— முதலியன.

II நிலைமொழி இறுதியில் அ ஆ ஊ ஒ ஓ ஔ, என்னும் உயிர்களில் ஏதாகிலும் ஒன்று இருக்க, வருமொழி முதலில், அ முதல் ஔ ஈறாகப் பன்னிரண்டு உயிர்எழுத்துக்களில் எது இருப்பினும் இவ்விரண்டு உயிர்களும் புணரும்போது, வ் என்னும் மெய்யெழுத்து இடையே வரும். வந்த அந்த வ் என்னும் மெய்யெழுத்தின்மேல் வருமொழி முதலிலுள்ள உயிர் ஏறி அதனை உயிர்மெய்யாக்கிவிடும்:—

கண்ட + அரசன் = கண்ட வ் அரசன் = கண்டவரசன். குறையா + ஆசை = குறையாவாசை. பூ + அலர்ந்தது = பூவலர்ந்தது. ஒ + ஒரு = ஒவ்வொரு. ஓ + என்று = ஓவென்று — முதலியன இவ்விதிக்கு உதாரணங்களாகும்.

# அண்ட புராணம்

[ 752 வது பக்கத் தொடர்ச்சி ]

## வெங்காய விசயப் படலம்

உலகிலுறு பொருளனைத்து முதவிடுநற் காசிபன்றன்
மலரடியை வணங்கியந்த மாதவர்க ளனைவருமே
பலர்புகழ்வெங் காயமதின் பாசரிய விசயத்தை
மெலிவகலமொழிந்தருள்வீ ரெனவிறைஞ்சிவேண்டினரே.

அவ்வுரைகேட் டருள்சுரந்த நெஞ்சினனு யருந்தவனும்
இவ்வுலக மன்றியெலா வுலகங்களு மேத்தநின்ற
எவ்வமில்சீ ருள்ளியத னியல்புரைப்பன் கேட்டிதனைக்
கவ்வையெனுங் கடல்கடந்தே யுய்ந்திடுமென் றுரைக்கலுற்
[றான். 2

முந்தையுக மாவலியின் மொய்ம்புடைய மகமதனில்
கந்தமுறுங் காய்கனிகள் கிழங்கவையுங் கலந்துசென்று
தந்தமது திறமுணர்த்தித் தலைமைபெற விழைந்தனவாய்
அந்தமிலா வலக்கணுற்றே யரசன்மாட் டணுகினவால். 3

அணுகியவை யுரைத்தவெலா மஞ்செவியேற் றாசனுமே
நுணுகியபே ரறிவுடைய வமைச்சர்முக நோக்கிநீவிர்
துணிவுடனே தேர்ந்தபொருள் சூழ்ந்துமை யினெனப்பகா
உணவினனி சுவையுடைத்தொன் றெவ்வொருவ ருரைத்
[தனரால். 4

ஒன்றினொடொன் றெவ்வவிலா: வுரைகள்கேட்டவ் வேந்த
[னுந்தான்
நன்றியதாந் தலைமைதனை நவின்றளித்த லெமக்கரிதால்
இன்றுமது குறைமுடிய வேண்டுமெனில் இகலுடையீர்
சென்றடைமின் தேவரிறை மகபதிதன் மருங்கென்றான்.5

என்றலுமே யெழுந்தவைதா மாவலியி னடிபணிந்து
கன்றியதோர் மனத்தினவாய்க் கற்பகத்தி னிழலிருந்த
குன்றினைமுன் சிறகரிந்த கொற்றவனைக் காணவெண்ணித்
துன்றினவாய்த் தொடர்ந்தனவா யடர்ந்துடனே யேகின
[வால். 6

ஏகுமவை யோசனையோ ரிரண்டதனில் வலியழிந்து
வேகமிலா திற்றிடையே வெள்ளரிபோற் சிலவிழுந்து
போகியபின் யோசனையோர் பத்ததனில் புல்லியதோல்
ஆகமுறு மரம்பையையே அனையவெலா மழுகியிடை 7

வீழ்ந்திடவும் வெகுதூரம் மனத்தின்வலி தளர்வுற்றுத்
தாழ்ந்திடாம லேகுதலுந் தடவரையிற் கானகத்தில்
ஆழ்ந்தகழ்ந்த கிழங்குகளுஞ் சோர்ந்துவலி யவிந்தனவாய்ச்
சூழ்ந்தநெறி துறந்தயர்வா லங்கங்கே நின்றனவே. 8

இசையழிந்த காய்பலவுங் கிழங்கினமு மிழியக்கண்டும்
விசைகுன்றா தேகியதோர் வெங்காயத் தின்வரவை
இசைத்திடக்கேட் டிந்திரனு மினிதெழுந்தே யிதுகாணும்
நசையினொடு நகைவிளங்க நடந்தெதிரே நாடினனால். 9

வண்டுதொடர் நறுந்தெரியல் வாசவனு மற்றதனைக்
கண்டுமனங் களிசிறப்ப வொளியெறிக்கு முகத்தினொடும்
கொண்டலெனமுழவதிரக்கொடித்தேரிற்கொணர்ந்துதனக்
கண்டையிலோ ராதனத்தி விருத்தியபின் னீதுரைத்தான்.

அந்தமிலென் னருந்தவத்தின் பயனெனவே பொலியுநினை
வந்தெதிரே கண்டுவந்தேன் மற்றினியென் செய்வதென
நந்தலிலா விளக்கெனவே யொளிவிளங்க வுவகையொடும்
இந்திரனுக் கியன்றவெலா மியம்பியதவ் வெங்காயம். 11

உற்றபரி சுரைத்திடக்கேட் டுள்ளமதி லுவகையுற
மற்றுமுள தேவரொடு முனிவாரும் புடைசூழ
முற்றுறுமம் மாவலியின் வேள்வியவி மோகமுடன்
பெற்றிடவே வெங்காயம் பின்பற்றி யேகினனே. 12

ஆங்கவர்தாம் வேள்வியிட மணுகிடவே யகிலமெலாம்
பாங்குடனே படைத்தளித்து மாய்த்திடுமப் பரமான
ஓங்கியசீர் மூவருமே யுற்றடைந்து களிசிறக்க
வீங்கியதோர் வெங்காயந் தனைக்கண்டு வியந்தனரால். 13

வியப்பெய்து மூவருக்கும் விண்ணவர்தம் இறையவனும்
கயப்புடைய காயினொடு கிழங்குகளுங் கழிந்ததுவும்
செயிப்புடைய வெங்காயஞ் சாருலகஞ் சேர்ந்ததுவும்
நயப்புடனே நவின்றிட்டா னவருமன மகிழ்ந்திடவே. 14

நாலாய மறைகளெலாம் நவின்றவனு மதுகேட்டு
ஏலாத கிழங்கினொடு காய்களுமே யிகல்புரியத்
தோலாது துளங்கியவெங் காயமிதற் கென்குறியாய்த்
தோலாகுந் துவராடை யளித்திட்டே னெனமொழிந்தான்.

தளையவிழுந் தாருடைய தானவர்கள் தம்முடைய
கிளைமுழுது முயிர்மாளக் கிளர்ந்திடுதன் தோளினிடை
வளைவுடைய வில்வாங்கி வாளிசொரி வானவனும்
வளையினொடு சக்கரமும் மன்னுகநின் னகத்தென்றான். 16

தஞ்சமென வந்தடைந்த மார்க்கண்டன் றனையளித்து
வெஞ்சினத்த காலனைமுன் வீழ்த்திட்ட காலவனும்
எஞ்சலிலா வெழிலுடைய வெங்காயந் தனைநோக்கி
செஞ்சடையோடென்னுருவாய்த்திகழ்ந்திடுகநீயென்றான்.

ஈதாகு முன்னிகழ்ந்த திமையவருக் கிறையவனும்
வேதாவும் விளம்பரிய வெங்காய விசயமதைக்
காதாலே கேட்டவர்நற் கதியடைவ ரென்றக்கால்
ஆதரவோ டருந்தினர்க ளடைபேற்றிற் கவதியெதோ. 18

எனவுரைத்த காசிபன்றன் இணைமலர்த்தாள் பணிந்தவரும்
பனியுடைய கண்களொடு பலவாகப் புகழ்கூறித்
தினமுமினி யிதையுண்டு திகழ்தவமே ஈண்டியற்றித்
துனியுறுநோய் துடைத்திடுவே மெனமகிழ்ந்து நோற்
[றிருந்தார். 19

குறிப்பு.

ஸ்ரீமான் T. S. இராமசந்திர ஐயரிடம் இனி இவ்வண்ட புராண ஏடுகள் இல்லை. இதன்மேல் அவர்க்கு ஏதேனும் கிடைக்குமாயின் பிரசுரஞ் செய்வோம். எனினும் அதற்கிடையில் இதுபோன்ற படலங்கள் வேறு எவரிடத்திலேனும் கிடைக்க இயலுமாயின் எமக்கு அனுப்பலாம். அண்டத்திலுள்ள பொருள்கள் கணக்கிலவாதலால் இப்புராணத்தின் படலங்களும் எண்ண எண்ண எவர்க்கும் ஒன்றிரண்டு சேரக்கூடியதாகவு மிருக்கவேண்டும். "கொதுகின் சிறப்புப்படலம்," "மூட்டுப் பூச்சியின் சிறப்புப்படலம்" முதலிய படலங்கள் அனேகம் இருந்திருக்கவேண்டு மென்பதற் கையமில்லை. ஆதலின் இதுகாறும் வந்துள படலங்கள்போன்றே, இருபதுமுதல் முப்பது விருத்தங்களுக்கு அதிகப்படாமல் அண்டப் பொருள்களின் வரலாற்றுச் சிறப்பை விளம்புகின்ற படலங்கள் நமது நண்பர்களிற் பலர்க்குக்கிடைக்கு மென்றே நம்புகின்றோம்.

இவ்வண்ட புராணம், காப்பியின் சிறப்போடு ஆரம்பித்ததேனும் காப்பிய மன்று. ஆங்கிலத்தில் அலக்ஸாண்டர் போப் என்பவர் எழுதிய "The Rape of the lock," "The Dunciad" என்பவைகளைப் போன்றவோர் போலிப்புராணம் (Mock Epic) இது என்பதை யாவரும் அறிவர்.

பத்திரிகாசிரியர்.

# வில்லி பாரத விளக்கம்

## சபா பருவம்.

(754 பக்கத் தொடர்ச்சி)

### இராசசூயச் சருக்கம்.

விரிதுகில் வேறு டாமல் விரைகமழ் தூநீ ராடிச்
சுரிகுழல் மேக மாரி துளித்திட வெதிர்கொள் வாருங்
கரதல மலரிற் சங்குங் கலாபமுஞ் சிலம்பு மார்ப்பத்
தெருவெலாந் தாமே யாகிச் சீறடி சிவப்பிப் பாரும்.

[மணங்கமழுஞ் சுத்தமான நீரிற் குளித்து, ஈரமான ஆடையை நீக்கி வேறே விரிந்த பெரிதான உடையை உடுக்காமலும், சுருண்ட கூந்தலாகிய மேகம் மழைபோன்ற நீர்த்துளியைச் சிந்தவும் எதிர்கொண்டு போகிறவரும், மலர் போன்ற கைகளிற் சங்கும் இடையிற் கோவைமணியும், காலிற் சிலம்பும் ஒலிக்கத் தெருக்களிலெல்லாம் தாமே யாகிப் பரந்து தங்கள் சிவந்த அடிகளைச் சிவக்கச் செய்கிறவர்களும்]

மணங்கமழும் பொருள்களை யணிந்துகொள்வது மாதர்க்கியல்பு. மெய்ம்மாசை நீக்கக்கருதி உடலின் மேற் பெய்யப்படும் நீரும் மணங்கமழ்ந்திருப்பது இயற்கையே. அன்றித் தூநீர், மகளிர்சேர்க்கையாற் பரிமளமடைந்ததோ ? நறுமணம் வீசும் மெய்களைத் தூநீரிலாட்டிப் புனலைப் பரிமளமாக்கி யதனிற் குடைந்து விளையாடு மகளிர், கண்ணன் வாயிலில் வந்தானென வறிந்த வக்கணமே, நீரிற் புகுமுன் சுற்றிய சிற்றுடையைக் களைந்து விரிந்ததுகிலை உடுக்க நேரமின்றி, நனைந்த உடையுடன் வெளிப்போந்தார். கண்ணனைக் காணக்கருதியவர், தெருக்கோலத்திலே மனதையூன்றியவர், நனைந்த வாடை நொய்தின் பொதிந்து மெய்யினுறுப்புக்களை யெடுத்துக் காட்டி விளங்கவைக்கும் தங்கள் திருக்கோலத்தை மறந்தார். தெருவெலாந் தாமேயாகிநிறைந்த வனிதையர்கூட்டம் கண்ணன் ஊர்வலத்தை எதிர்கொண்டுகூடியமற்றொரு கூட்டமாயிற்று. வந்தகூட்டம், வேந்தர்களை யெதிர்கொள்ளவேண்டிய சிறப்புக்களுடனமைந்து, வீதியிற் றண்ணீர் தெளித்து அதனைப் பதன்படுத்தியது. ஆடையினின்று வீழ்ந்த அம்புதத் துளிகளும் நாரியர்தம் சுருண்ட வளகபாரத்தினின்று துளித்த நாரமும் வீதியைப் புழுதி நீக்கிப் பண்படுத்தின. மேனாட்டுச் சுந்தரிமார்க்கன்றி நமது நாட்டுக் காரிகையார்க்கும் குழல்சுருண் டழகைத் தந்திருந்தது. கையிலிருந்த சங்காலான வளைகள் ஒலித்தனவென்றது, கண்ணனைக் கண்ட காரிகையார் கைகூப்பி வணங்கிய செயலைக் குறிப்பாலுணர்த்திற்று. கமலக்கண்ணனைக் காணவே மெய்பூரித்து வீங்கக் கலாபமார்த்தது. பெருமகிழ்ச்சி பொங்கக் காதுகளி லின்னிசை நிறையக் கூத்தாடத் தினவுகொண்ட கால்கள் பைபப்பையச் சிலம்போசையைப் பரப்பின. மனைதொறும் மனைதொறும் வெளிப்போந்தமங்கையர்கூட்டம், ஆடவரை அப்புறப்படுத்தி யெங்குந்தங்கிற்று. முன் னொருபோதும் வழிநடந்தறியாத மென்மைப் பாதங்கள், உத்தம விலக்கணத்திற் கேற்பச் சிறியதாயமைந்த சீறடிகள், மாளிகைநின்றும் தெருவரை நடந்து கன்றியமலரடிகள், சிவந்து, தம்மைத் தாமரைக் கொப்பிடுவ தெவ்வகையினு முண்மையெனக் காட்டின.

வார்குழைப் பற்ப ராக மணிவிளக் கேற்று வாரும்
நேரிழை மருங்குல் வாட்டு நிறைகுடம் பூரிப் பாருங்
காரிளங் கமுகும் பச்சைக் கதலியு நிரைத்துத் தோ
தோரண நாட்டு வாருந் தூமலர் சிந்து வாரும். [ளாந்

[பெரிய காதணிகளாகிய பதுமராகத்தினால் அழகிய விளக்கை யேற்றுவாரும், இழைபோன்ற மெல்லிய இடுப்பைத் துன்புறுத்தும் குசங்களாகிய பூரண கும்பங்களை உவப்பால் பூரிப்பாரும், கழுத்தாகிய பசுங்கமுகையும் கவானாகிய பச்சைவாழை மரங்களையும் வரிசைப்பட நிறுத்தித் தோளாகிய பூமாலைத் தோரணங்களை நாட்டுபவர்களும் நல்லமலர்களைச் சிந்துவாரும்]

முற்காலத்தி லிந்தியநாட்டிற் பெரியோரை யெதிர் கொள்ளுமுறை மங்கலவிளக்கேற்றி நிறைகுடம் பூரித்து, வாழை கமுகு முதலிய நிரைத்துத் தோரண நாட்டி மலர்சிந்துதல் ஆய இச்செய்கைகள்யாவற்றையுமிங்கு மகளி ரியற்றினர். மற்றிவர் செய்கையோ புதுவகைத்து. பொன்னைக் கொட்டிப் பொருளைத் தேட வவர் நினைத்திலர். எவற்றினு மேம்பட்ட மெய்யுழைப்பே சிறந்ததெனக்கருதினர். அன்பின் மேலீட்டாற் றம்மையே யர்ப்பணஞ்செய்ய வெண்ணினர். ஆகையாற் காதிலணிந்த பத்மராகமாகிய விரத்தினங்களையே விளக்கா யேற்றிக் காட்டினர். நிறைகுடமிடையிற்றாங்கி மருங்குலை வருத்தி நேர்நின்றார். கமுகுங் கதலியுஞ் சிலர் தத்தம் வாயிலிடை நின்று நிறுத்தினர். மலர்சூட்டிய வேய்ந்தோள்கள் தோரணமாய்



நாட்டப்பட்டன. 'தோரண நாற்றுவாரு' மென்று பாடமோதித் தோரணங்களைத் தொங்கவிடுபவரும் என்று பொருள்கூறுவது மொன்று. இங்ஙனந் தீபமேற்றி நிறைகுட நிரைத்துக் கதலியுங்கமுகு நாட்டி, தோரணந் தெருவில் நாற்றி, புதுமலர்சிந்தி மகளிர் களியாட் டயர்ந்தது, அந்நாடு பிணியின்றியும், மனத்தின் கிளர்ச்சியை யடக்கும் கவற்சியின்றியும், பல்வகையில் மகிழ்ச்சியை வெளிக்காட்டுவதற் கேதுவான செல்வம்நிறைந்து இடும்பையின்றியும் இருந்ததோர் பெருவளத்தைக் காட்டி நிற்கின்றதன்றோ ?

இங்ஙனம் வனிதையர் தம்மையே யுருவகப் படுத்திக் கூறியது ஒரு புதுமையென்று கூறினேம். ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் என்னும் கவி எழுதிய கதையொன்றில், ஸ்காட்லாந்து தேசத்துக்குடிகள் ஜமீன்தார்போன்ற தங்கள் நில அதிகாரிகளிடத்துக் கொண்டிருக்கும் வாஞ்சையை விளக்கிக் காட்ட வந்த விடத்தில் நிகழ்ந்ததாய்ச்சொல்லும் சம்பவமொன்று நாம் இங்கே யெடுத்துக் கூறத்தக்கது. ஸ்காட்லாந்து தேசத்துக்குடிகள் மிகவும் தேசபக்தியும், தெய்வபக்தியும் நிறைந்தவர்களாய்த் தத்தம் குடும்ப விருத்தியில் கருத்தை யூன்றியிருப்பவர். அன்னார் தங்கள் குடும்பத்திற்காகவும் தலைவனுக்காகவும் உயிரைத் துறக்கத் தயாராயிருப்பவர். ஆயினுமவர் வறுமைப்பிணியாற் பீடிக்கப்பட்டவர் இஃதிவ்வாறாக, ஸ்காட்லாண்டிலிருந்து தென்தேயம் போந்துள ஒருவனை நோக்கி அத்தென் தேயத்தான் தன்னாரி லுணவுண்ணும்போது அறையையும் மேஜையையும் யலங்கரிக்க வெள்ளியாலானதும் பொன்னாலானதும் விலையுயர்ந்ததுமான கலங்களை யுபயோகித்து வருவதைப்போல் ஸ்காட்லாந்து தேசத்தினர் செய்ய முடியா தென்றான். அப்படிச் செய்யமுடியுமென்று வந்தவ னுறுதிகூறவே இருவரும் பந்தயம் போட்டுக் கொண்டனர். அத்தென்தேசத்தான் வடக்கே சென்றான். உண்டியுண்ணும் நேரம் கிட்டியது. யாவரும் தலைவனைக்காண வஞ்சியவராய் ஒளிந்து நின்றார்கள். படைக்கஞ்சாதவனான அவன் தம்பி யிதைக்கேள்விப்பட்டு உண்ணும் அறையில் உயர்ந்தோரும், சிறந்த வுருவத்தினரும், மல் யுத்தத்தில் மா பலத்தருமான அநேக வீரரை வரிசையாய்நிறுத்தி யவர்களிடம் ஒவ்வோர் தீவர்த்தி கொடுத்திருந்தான். தீச்சோதி சூழ்ந்த மானிட விளக்கேற்றினதைத் தென்தேசத்தான் கண்டு வியந்து தன் பணயத்தை யிழந்து, தம்பியையும் மெச்சிச் சென்றான்.

இவ்வகை குழுக்கொண் டாங்க ணெழுவகைப் பருவ மாதர்
செவ்வியு மழகுந் தேசுஞ் செய்யபூந் திருவோ டொப்பார்
மெய்வழி நின்ற போக மேகமே யனையான் றன்னை
மைவழி கண்ணி னோக்கி மனனுற வணங்கி னாரே.

[இவ்வாறு கூடிய பேதை பெதும்மை முதலிய எழுவகைப் பருவத்துப் பெண்கள், இயற்கையழகும் செயற்கையழகும் ஒளியும், செந்தாமரை மலரில் வாழும் திருமகளோடொப்பத் திகழ்பவர், இன்பமே உடம்பெடுத்து நின்றது போல் தோன்றிய கருமுகில் வண்ணனை மைப்பெருகும் கண்ணால் நோக்கி மனதால் வணங்கினார்கள்]

ஏழுவயதுடைச் சிறமியர்முதல் நாற்பது வயதுடைப் பேரிளம்பெண் அடங்கலாக எவ்வகைப் பருவத்தினருங் கூடினர். நாற்பதிற்கு மேற்பட்டோரில்லையோவெனிற் குறிப்பா யவர்களையும் குறித்ததாகவாவது, நாற்பது வயதுவரைக் காட்சிகளைக் கண்டு களித்துத் தெவிட்டியதா லுற்சாகங் குறைந்து உள்ளேயே யிருந்துவிட்டனரென்றாவது கொள்ளலாம். பருவமங்கைய ரொருவகையி லின்பமடைய, வேறுவகையில் மகிழ்ச்சிகொள்ளுஞ் சிறமிகளும் அங்குக் கூடினர். இயற்கையழகுடைய மாதர்க்கும் செயற்கை யழகாற் செய்யவேண்டிய சிறப்பில்லையாயினும், மங்கையர்க் கியற்கையான குணம் மாற்றிலதென்று காட்டுவான்வேண்டிச் செவ்வியு மழகும் சேர்த்து வைக்கப்பட்டன.

போக மென்பதொன்று தானே செவ்விய வடிவமெய்திச் செங்கமலக் கண்ணனாய் உருவெடுத்தது. ஐம்புலன்களால் துய்க்கப்படுமின்பமே மானிட வடிவெடுத்து நின்றாற்போன்ற வுருவுடையன் கண்ணன். போக வுருவினனா யிருந்தும் தன் கடவுட்டன்மையிற் குறைவில்லாத வுண்மைவழியில் நின்றவனு மாகும். மேகம் போற் கைம்மாறு கருதாத கடப்பாட்டை யுடையவனாய் மேனின் றெவர்க்கும் கருணைமழை பொழிந்து உலகத்தை யுய்யச்செய்யு மிறைவன் மேகமாயினன். யுடலுமுயிரு முருகி ஆனந்தக்கண்ணீர் சொரிய, அதனால் மை வழிந்து நின்றது. கண்ணினா னோக்கினும் புலன்வழி மனதைச் செலுத்தாது அதனை யோக வகைபோ லடக்கிக் கடவுளின் இணையடியைச் சேர்ந்தனராம் மாதராரும்.

189074.

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

### 17. உண்டாட்டுப் படலம்.

கற்று முற்றிய பேதைய ரிலக்கணங் கண்டோம்

நெறியின் புறஞ்செலா நீதிசால் கோசல மாதர்
நறவினை நனிமகிழ்ந் துண்பத னமைதிகா
னேதென் றறைவதுநம்மனோர்க் காவ
756 பக்கத் தொடர்ச்சி.
தொன் றன்றெனினு மதனாற் குறை
வொன்று மவர்களுக் கெய்தவில்லை
யென்பது திண்ணம். அவமிலாப்
பூவருந் தேனாயினும் ஆகுக; மற்றுமதிசிதைத்
திருவழிக்கும் மதுவே யாயினு மாகுக; "மடந்தை
வாய்வழி புக்கதேன் அமிர்தமாய்ப் பொலிந்த போன்றவே" என்றுரைக்குங் கம்பர், தீயவெங் கள்ளேயாயினுஞ் சீலமுடையவித் தெரிவையர் வாய்வழி சேர்ந்தா லது சாகா மருந்தாக மாறிவிடும் பெற்றியைப் பேசுகின்றார். செய்யரைச் சேர்ந்துளாருஞ் செய்யராய்த் திகழ்கின்ற வாய்மையை இங்குப் பின்னுமோர் முறை சாதித்த படியாகும். அதுவுமன்றி அரனுக்கொருநாள் 'கொடிய ஆலமு மமுதாகவிலையோ' ! பொருளின்பால் நன்மையுந் தீமையுமில்லை; நன்மையுந் தீமையும் நேர்வது, அவைகளை நுகர்வோர் நிலைமையினது தன்மையின் அளவிற்கேற்றவா றமைகின்றது.

அவ்வா றமைந்தமது அருந்தினோர்க்கிங்கு யாது செய்ததெனின்,

தாமமு நானமுந் ததைந்த தண்ணகிற்
றாமமுண் குழலிய ருண்ட தூநறை
ஓமவெங் குழியுகு நெய்யி னுள்ளுறை
காமவெங் கனலினைக் கனற்றிக் காட்டிற்றே

[மாலையும் கஸ்தூரியும் நிரம்பியதாய்க் குளிர்ந்த அகிற்புகை ஊட்டப்பெற்ற கூந்தலையுடைய மாதர் உண்ட பரிசுத்தமான நறையானது, வெப்பமுடைய ஓம குண்டத்தில் வார்த்தநெய்யைப்போல், அவர்களது உள்ளத்தில் அமைந்த மிகுந்த காமத்தீயை மூட்டிக் காட்டியது]

என்றனர் கம்பர். தூ நறை என்று உரைத்தது கொண்டே இக்கோசலக் குலமாதர் குடித்தது பூவின் தேனன்றி வேறொன்றுமில்லை என்று வற்புறுத்தவொண்ணாதெனினும், நமன்வாயில் தான் களிக்கின்றானென்பது ஓராது கன்னிநன் மயிலன்னாரை நெடுங்களியாட்டங்கண்ட இராவணன் ஊட்டிய கள், வேகம் மிகவுடைய வேறோர் பானமாயிருத்தல் வேண்டுமென் றெண்ணும்படி,

நற்பெருங் கல்விச் செல்வ
நவையறு நெறியை நண்ணி
முற்பய னுணர்ந்த தூயோர்
மொழியொடும் பழகி முற்றிப்
பிற்பய னுணர்த றேற்றாப்
பேதைபோல் வஞ்சன் செய்த
கற்பனை யென்ன வோடிக்
கலந்தது கள்ளின் வேகம்

[நல்ல பெரிய கல்விச்செல்வத்தை ஈட்டவேண்டும் என்ற குற்றமற்ற வழியைச் சேர்ந்து, அக்கல்வியின் முதலாய பயன் இன்னதென்று உணர்ந்த தூயவர்களான புலவர் மொழிகளோடு பழகி, அம்மொழிப்பயிற்சியில் தேர்ந்து, தான் படிக்கவேண்டியதெல்லாம் படித்து முடித்துவிட்டதாக எண்ணிக் கொண்டு, பின் அக்கல்வியின் மெய்ப்பயனை உணர்ந்துகொள்ளாத அறிவிலிபோலவும், வஞ்சனையுள்ள ஒருவன் கற்பித்த சூழ்ச்சிபோலவும், அக்கள்ளின் வேகம் விரைவிற் பரவி யாவரையுங் கலந்தது]

என்னுமாற்றால் கம்பர் அங்கு வேறுபடுத்திக் காட்டலாகின்றனர். எனின், இருபது கரமுடைய அவ்வரக்கன் அருத்திய கள்ளின் கொடுமையெங்கே, இவ்வரிவையர்பருகியதேனின் மென்மையெங்கே. ஓடிக்கலந்த அக் கள்ளின் தீமையை அறியவேண்டுமெனின் அதற்குவமையாய் வந்துள்ள இருதிறத்தவராலும் விளையும் கெடுதியை நன்கு உணர்தல் வேண்டும். கல்வியிலா மூடரின் இழிவை உரைப்பார் பலர்; கற்றறிந்த மேன்மக்களின் பெருமையைக் காட்டுவார் பலர்; ஆனால், கற்றறிந்த மூடரின் வருங்கொடுமையை வகுக்க நினைத்தவர் கம்பரே. தான் கற்றிருப்பதால்மாத்திர மன்றி, கல்விபயில்வா ரியற்கையெல்லாம் நுனித்துணர்ந்திருத்தலாலும் கம்பர் கல்வியிற் பெரியவராகின்றார். கல்லாதார் ஒருவர்க்குந் தீங்கு செய்யார்; செய்யினு மத்தீங்கு தமக்கே செய்துகொண்டதாய் முடியும். மற்றுக் கற்றும் பயன்தேற்றாப் பாழும் பேதைகள் சனங்களிடைப்புரிகின்றதீமையினளவைப்பேசலரிது. கற்றவர் என்ற பேரொன்று இருத்தலால் இவர் வேகமொடு விளம்புகின்றவைகள் தமக்கு உறுதிபயக்கத்தக்கனவென்றுஜனங்கள் எளிதில் நம்பிவிடுதல் இயற்கையே. இவர் வார்த்தையைக் கேட்டுப் பற்பலர் தலைவிரித்து ஆடப்புகுகின்றனர். ஜனங்களுக்குத்தீமையே விளைவிக்கக் கூடியவற்றை இத்தகையவர், தம் அறியாமையால் நன்மை பயப்பனவென்று நவில்வதால், உறுதியுமவதியுந் தலைதடுமாறிப் பகுத்தறியும் பயிற்சியில்லா மாந்தரைக் கரையரிய கலக்கத்து ளாழ்த்திவிடுகின்றனர். இன்னவாறு இவர் செய்வது கல்வியின் பிற்பயன் உணராத பேதைமையாலேயே யன்றிச் சனங்களைக் கெடுத்தல்வேண்டுமெனும் புல்லிய நோக்கத்தாலன்று. அவ்வாறு தன்னுடைய இலாபத்திற்காக மற்றவர் கெட்டழியும் விதங்களைப் போதிக்கின்ற வஞ்சகர்கள் வேறுளர். அன்னவரையுங் கம்பர் மறக்கவில்லை. வஞ்சகர் செய்யுங் கற்பனைகளும் சனங்களிடை கடிய வேகத்தோடு பரவிவிடுகின்றது. நோக்கம் எதுவேனும் அந்தத்தில் அப்பேதையும் இவ்வஞ்சனும் விளைவிக்கின்ற தீமைகள் விரைவிலும் அளவிலுந் தன்மையிலும் தம்முள் வேறுபடாது இரண்டும் ஒருபடித்தாய் உலகை உழக்குவதால் அவ்விரு திறத்தோருங் கடக்கரிய உவமைகளாய்க் கள்ளிற் கமைந்தனர். கல்வியின் பிற்பயன் தேராது, புலவர் மொழியொடுமட்டுமே பழகி முற்றிய பேதையரும், வஞ்சனையால் பற்பல கற்பனைகள் செய்யுங் கயவரும், இவர்களது சொற்கேட்டு ஆடுவோரும், உலகெனு மரங்கினில் ஏறி நடிக்குங்கால் புரியுமாறே, கள்ளின் வேகம் கலந்துள தெய்வக் கணிகையரும்,

ஏனைய பிறவுங் கண்டார்க்
கிந்திர சால மென்னத்
தானவை யுருவிற் றோன்றும்
பாவனைத் தகைமை சான்றோர்
மானமர் நோக்கி னாரை
மைந்தரைக் காட்டி வாயா
லானையை விளம்பித் தேரை
அபிநயத் தியற்றி யுற்றார்.

[பாடலாலும் ஆடலாலும், தாம் குறிக்கின்ற பொருள்களைக் காண்போர் கண்முன் உருவத்தோடு வந்து நிற்கச் செய்கின்ற இந்திரசாலம்போல் பாவனைபுரியவல்ல அந்நடனமாதர் (கள்ளின் வேகத்தால் கலங்கி இருக்கும் இப்பொழுது) தம் பாடலின் விஷயமாக மைந்தரையும் மாதரையும் காட்டுவாரேனும், வாய்வழுவி ஆனை என விளம்பி, விளம்பிய ஆனையின் பாவனைகாட்டப் புகும்போது அவர் அபிநயத்தால் தேரையே தோன்றும்படி புரியலாயினர்]

என்று எடுத்துக்காட்டிய கவியின் நுண்ணுணர்வு நம் உள்ளத்தைக் கவர்கின்றது. இற்றைநாள் செய்திகளுக்கு இவ்விலக்கணம் முற்றிலும் பொருந்துகின்ற அமைதியை நினைக்குங்கால் வருவதுநோக்கிக் கம்பர் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே வகுத்து வைத்தனர் என நாம் மதித்திடல் வேண்டும். பேதையர் முழக்கிற்கும் வஞ்சகர்சூழ்ச்சிக்கு மாளாகி உழல்வோர் கருத்தொன்றுஞ் சொல்லொன்றுஞ் செயலொன்று மாக வேறுவேறாகி அரங்கேறி யாடுகின்ற விபரீதங்களத்தனையும் இராவணன் களியாட்டங்கண்ட அரம்பையர் அவிநயத்தில் காணலாகின்றோம். காட்டுவதோ மானுடப் பெருமையை—அப்பெருமை யாதென விளம்பப்புகின் யானைபோன்ற பெரிய பொருள்களைப் பெற்றிருத்தல் என்பர்—அதனைத் தான். செய்கையில் சாதிக்கும்போது தேரையின் உருவமும் அளவுமன்றிப் பிறிதொன்றும் இயற்றலாவதில்லை.



இனி, கற்றது கல்வியேனும் பலர் பேதையராவதன் சரித்திரத்தைக் கம்பர் கூறுமாறும் சுவையுடைத்தாம். "கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை," "கண்ணுடையரென்போர் கற்றோர்" என்பனபோன்ற கட்டுரைகளைக் கேட்டு முதலில், நற்பெருங் கல்விச் செல்வ நவையறு நெறியை நண்ணுகின்றனர். நண்ணித் தூய்மைவாய்ந்த புலமையோர் ஆக்கிய நூல்களைப் பயில்கின்றனர். அப்புலவர், கல்வியின் முதற்பயன் கடவுளை அடைவதே என்பதை உணர்ந்து, அப்பயனை யாவரும் எய்துமாறு எழுதியுளரேனும், மாணவரிற்பலர் அவர் மொழிகளைமாத்திரம் பழகி மெய்ப்பொருளைத் தேர்ந்துகொள்வதில்லை. மொழியினைப் பயில்வதெல்லாம் பொருளை அறிவதற்கென்னும் பான்மைபோக்கி இம்மாணவர், அம்மொழிகளிலும் அம்மொழிகளைக்கொண்டு செய்யவல்ல ஆராய்ச்சிகளிலுமே தம் நினைவைச் செலுத்தி முதிர்ச்சியடைந்து, தாங்கள் சொல்லால் முழக்குகின்ற ஆற்றலிற் செருக்குற்றும், இத்தகைய மொழிப்பயிற்சியாலும் அதுகொண்டு செய்யும் ஆராய்ச்சியாலும் கிடைக்கின்ற ஊதியத்திற் கவாவுடையவராகியும், "கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுவதன்றி" வேறில்லை என்ற வாய்மையை ஒருபோதும் உணரவே உணராத பேதையர்களாகிவிடுகின்றனர். இப்பேதைமையைப் பெறுவதற்கே பொருள்கொடுத்தும் உடல் வருந்தியும் பற்பலர் முயல்கின்ற உண்மை மறைபொருளன்று. பிற்பயன் உணர்தல் தேற்றா இத்தகைய பேதையோர் வெளிப்பார்வைக்குக் கற்றவர்போல் தோன்றுவதால் உலகத்திலே செல்வாக்குடையவராகின்றனர். அச்செல்வாக்குக் கள்ளின் வேகம்போல் கலக்கின்றது.

இவ்வாறு கல்வித்துறை படிந்தும், மொழிகளிலே யளைவதன்றிப் பிற்பயன் அறியாத அறியாமையினும் மெய்யாய அறியாமை (real ignorance) வேறெங்குளது. கள்ளின் செய்தியே இன்னது என்பதை வள்ளுவர் நூலிலுங் காணலாம். கல்வியின் முற்பயனுணர்ந்த வந்தத் தெய்வத் தூய்மையோர் வகுத்த 'கள்ளுண்ணாமை' என்னு மதிகாரத்தில்

கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

[பொருளைக் கொடுத்துத் தம் மெய் அறியாமையைச் செய்யுங் கள்ளைக் கொள்ளுதல் பயன் அறியாமையை உடையது]

என்றுகாட்டிய பேதைமையையே கம்பர் இச்செய்யுளில் விளக்கியுளார் போலும்.

இவ்வகையில், கற்றறிந்தும் பிறர்க்குரைத்தும் பிற்பயன்உணராப்பேதையையும்,வஞ்சன்செய்த கற்பனையையும் போல், இராவணன் கொடுத்த கள் வேகமொடு கலந்து, அரம்பையர் கருத்துஞ் சொல்லு மபிநயமும் மாறுபடுமாறு கலக்குவதாக, இவ்வயோத்திமாதர் அருந்தியதேன் அவரது அன்பினைப் பெருக்கியதன்றி வேறொரு விபரீதமும் விளைக்கவில்லை. மதுமயக்குற்று அம்மாதர் புரிந்த காட்சிகளின் சில பின்வருவன.

விடனொக்கு நெடிய நோக்கின்
அமிர்தொக்கு மின்சொ லார்தம்
மடனொக்கு மடனு முண்டே
வாணுத லொருத்தி காணத்
தடனொக்கு நிழலைப் பொன்செய்
தண்ணறுந் தேறல் வள்ளத்
துடனொக்க வுவந்த நீயே
யுண்ணுதி தோழி யென்றாள்.

[ஒளிபொருந்திய நெற்றியை உடைய ஒருத்தி தன் பெருமைபொருந்திய பிரதிபிம்பத்தைப் பொன்னாற் செய்த குளிர்ந்த தேன் இருந்த கிண்ணத்தில் கண்டு, (அது தன் தோழி என்று மயங்கி) "தோழியே நீயும் என்னோடு உவந்து உண்பாய்" என்றாள். எனவே, விடம்போன்ற பெரிய கண்களையும் அமிர்தம் போன்ற இனிய சொற்களையும் உடைய மாதர்களது மடமைபோன்ற மடமையும் உண்டோ]

அச்சநுண் மருங்கு லாளோ
ரணங்கனா ளளக பந்தி
நச்சுவேற் கருங்கட் செவ்வாய்
நளிர்முக மதுவுட் டோன்ற
பிச்சிநீ யென்செய் தாயிப்
பெருநற விருக்க வாளா
எச்சிலை நுகர்தி யோவென்
றெயிற்றரும் பிலங்க நக்காள்.

[முறிந்துவிடுமோ இது என்னும் அச்சத்தைக் கண்டவர் அடையும்படி நுண்மையா யிருக்கின்ற இடையையுடைய அணங்கு போன்றவள் ஒருத்தி, நஞ்சூட்டிய வேல்போன்ற கரியகண்ணும் சிவந்த வாயு முடைய தன் குளிர்ந்த முகம் மதுவினுள் தோன்ற, (வேறொருத்தி மதுவிழைந்து வந்துளாள் என மதித்து) "ஏ பித்தம் பிடித்தவளே,என்ன காரியம் செய்கின்றாய், இந்தச்சாடியில் மிகுந்த நறவுஇருக்க அதை அருந்தாமல் யான் குடித்த கிண்ணத்திலுள்ள எச்சிலை என் பருகுகின்றாய்," என்று மலரரும்புபோன்ற பற்கள்தோன்றச் சிரித்தாள்]

களித்தகண் மதர்ப்ப வாங்கோர்
கனங்குழை கள்ளி னுள்ளால்
வெளிப்படு கின்ற காட்சி
வெண்மதி நிழலை நோக்கி
அளித்தனெ னபயம் வானத்
தரவினை யஞ்சி நீவந்
தொளித்தனை யஞ்செ லென்றாங்
கினியன வுரைத்து நின்றாள்.

[அங்குப் பொற்குழை அணிந்த ஒருத்தி, கள்ளினுள் பிரதிபிம்பமாகத் தோன்றும் வெண்மையான சந்திரனது நிழலைக்களித்த தன்கண்களால் மதர்த்துநோக்கி, "சந்திரனே, நீ வானத்திலுள்ள இராகுவிற்கு அஞ்சி இங்கு வந்து தஞ்சம் அடைந்துளாய் என்பது உணர்கின்றேன். நானுனக்கு அபயம் அளிக்கின்றேன், பயப்படாதே" என்று இனிய வசனங்கள் பேசினாள்]

சந்திரன் நிழலைச் சந்திரனே என மயங்கினாள் இவள். இன்னொருத்தி தன் முகத்தைச் சந்திரன் எனவும், அச்சந்திரன் மதுவில் வந்து புகுந்ததெனவும் மயங்கியவோர் இருமடி மயக்கத்தை,

கண்மணி வள்ளத் துள்ளே
களிக்குந்தன் முகத்தை நோக்கி
விண்மதி மதுவி னாசை
வீழ்ந்ததென் றொருத்தி யுன்னி
உண்மகிழ் துணைவ னோடும்
ஊடுநாள் வெம்மை நீங்கித்
தண்மதி யாகில் யானுந்
தருவனிந் நறவை யென்றாள்.

[ஒருத்தி, கள்நிறைந்த அழகிய கிண்ணத்தில், களித்திருக்கும் தன் முகத்தைநோக்கி, ஆகாயத்திலுள்ள சந்திரன் கள்ளின் ஆசையால் அங்கு வந்து விழுந்தது என்று எண்ணி, "எனது உள்ளம் மகிழ்கின்ற நாயகனோடு நான் ஊடியிருக்கும்போதும் நீ சுடாமல், குளிர்ந்த சந்திரனாகவே இருப்பாயென்று வாக்களிப்பாயாயின், இந்த நறவை நீ குடிக்கத் தருவேன்" என்றாள்]

இன்னபடி மதுமயக்கத்தால் தன்முகத்தையும், வானூர் மதியையும் கள்ளினுள் கண்டு மதியென்று நினைத்த மாதர் இரண்டொருவர் வேறு காவியங்களில் காட்சி தந்துளர். அவர்களில் ஒருமாது ஜீவகன் காதலி குணமாலை யாவாள்,

குழைமுக மிடவயிற் கோட்டி யேந்திய
அழனிறத் தேறலுண் மதிகண் டையென
நிழன்முகப் பகைகெடப் பருகி நீள்விசும்
புழலென நோக்குவாண் மதிகண் டேடினாள்.

[அன்பன் தனக்குக் கொடுப்பதற்கு ஏந்திய தழலின் நிறமுடைய தேறலைத் தன் முகத்தை இடப்பக்கந்திரும்பி நோக்க, அதனுள் தன்முகத்தின் பிரதிபிம்பம் தோன்ற அதனைச் சந்திரன் என்று எண்ணி, அச்சந்திரன் தன் முகத்திற்குப் பகையாகுந் தன்மையுடையதாதலால் அப்பகையை இன்று தீர்த்துக்கொள்ள நினைத்தவளாகி விரைவுடன் மதுவைப் பருகி, "இனி நீ ஆகாயத்தில் கெட்டலையக் கடவாய்" என்றுகூறி அங்கு அது, தனக்குப் பின்னும் துயருற நிற்றலைக்கண்டு வாடினான்]

மற்றவளைப் பாண்டிநாட்டில் பரஞ்சோதிமுனிவர் காட்டக் காணலாம்:—

மங்கையா ளொருத்தி தானுண்
டெஞ்சிய மதுவுட் டோன்றுந்
திங்களை நோக்கி யென்னைப்
பிரிவின்கட் டீயாய்ச் சுட்டாய்
இங்குவந் தகப்பட் டாயே
இனிவிடேன் கிடத்தி யென்னா
அங்கொரு வள்ளங் கொண்டு
சேமித்தா ளருந்தல் செய்யாள்

[பெண் ஒருத்தி தான் உண்டு எஞ்சிய மதுவினுள் பிரதிபிம்பித்த சந்திரனைப்பார்த்து, "நாயகனைவிட்டு நான் பிரிந்திருந்த நேரங்களில் நீ நெருப்பாய்ச் சுட்டாய். இப்பொழுது இங்கு அகப்பட்டனை. விடாது உன்னைச்சிறை செய்வேன், இங்கேயே கிட" என்று வேறொரு கிண்ணங்கொண்டு மூடிவிட்டு அதனைத்தான் குடிக்காதிருந்தாள்]

அயோத்திமாதர்க்கும் ஏனையோர்க்கும் உள்ள வேறுபாட்டை மதுப்பருகிக் களித்தநிலையிலுங் காணலாம். எத்தகைப் பகையினோரும் அடைக்கலமான போது அவர்தமை அருளொடு நடத்தலே பெருந்தகை. அடைக்கலமாகாமல் தன் வயத்தவராய்த் தன்னுடைய அருளுக்குப் பாத்திரமாய் அகப்பட்டபோதும் அப்பகைவரைக் காத்தல் பின்னும் பெருமையுடைத்து. தம் நிழலைத் தோழியென்று மதுப்பருகக் களித்ததுகிடக்க விடமும் அழலும் பலநாள் தம்மேமேனின்று பொழிந்தள திங்களுக்கு அபயம் அளித்தனள் கோசலம் வாழ்வாள் ஒருத்தி. மற்றொருத்தி திங்களை ஒரு சிறு நிபந்தனைக்குட்படுத்தி நட்பாடினாள். குடிக்கும் முன்னும்பின்னும்குணமாலையோ மதியொடு இகலிய பகைகெடப் புரியவே நினைத்தனள். மதுவி னாசையால்வந்து வீழ்ந்த சந்திரனைப் பொறியுள் படுத்திச் சிறைசெயப் புக்கனள் பாண்டிநாட்டுப் பேதை. தயரதன் பரிவாரத்திருந்த மாதர் பருகிய மது அவர் உள்ளுறை அன்பு ஒன்றையே கனற்றிக்காட்டும் பெற்றியதாயதைப் பின்னும் இதனால் பெறலாமே.

மதுவின் வெறியினால் தன்னையே வேறாக மயங்கின மடமங்கையர் செய்திஇரண்டு திருவிளையாடற்புராணமுடையார் கூறுகின்றார். ஆழத்திலிலதேனும் ஆசியத்தில்அவை கம்பர்கற்பனைக்கு இணையாயிருக்கலாம்:—

ஒருத்திகள் ளுண்கின் றுடன்
உருவமந் நறவுட் டோன்ற
ஒருத்தியென் னுடன்வந் துண்பாள்
காணென வுண்ட தோழி
ஒருத்திவந் தென்செய் வாடன்
உருவமு நோக்கிப் பேதாய்
ஒருத்தியோ விருவ ரென்று
ளெச்சிலென் றுகுத்து விட்டாள்.

[கள்ளுண்ணும்ஒருத்தி தன்னுருவத்தை அதனுள்கண்டு, "என்னுடன் ஒருத்திவந்து உண்கின்றாள், அவளை நீ வந்து பார்" என்று தன் தோழியைக் கூப்பிட்டுக்காட்ட; வந்த அத்தோழியும் குடிமயக்கத்தில் இருப்பதால், தன்னுடைய உருவத்தையும் அம்மதுவினுள் கண்டு, "பேதாய், ஒருத்தியோ இருப்பது, இரண்டுபேரல்லரோ" என்றுகூறி அம்மது பிறர் உண்ட எச்சிலென்று கொட்டிவிட்டாள்]

சாடியு ணறவ முண்டாள்
தன்னுரு வேறு பாட்டை
ஆடியு ணோக்கி நானோ
அல்லனோ வெனைத்தான் கைகொண்
டோடினர் பிறரு முண்டோ
உயிரன்னார் வந்திங் கென்னைத்
தேடினென் செய்கே னென்னைத்
தேடித்தா சேடி யென்றாள்

[சாடியிலிருந்த கள்ளத்தனையும் குடித்தவள் ஒருத்தி தன் உரு வேறுபட்டிருப்பதைக் கண்ணாடியிற் பார்த்து, "இது நானோ அல்லனோ! என்னை யாராவது பிடித்துக்கொண்டு ஓடிவிட்டனரோ! எனது நாயகன் இங்கு வந்து தேடினால் நான் என்னசெய்வேன்! ஆகையால் தோழி, நீ யென்னை விரைவில் தேடிக்கொடு," என்றாள்]

மதுவின் மாயத்தால் மெய்மறப்பதில் இவளை வெல்லலரிது. தன்னையே இவ்வாறு துறக்குந்தன்மை தங்கியதாலோ காமமும் கள்ளும் ஒன்றென்பர் மேலோர்! இவ்வித கற்பனைகளுக்கு இடந்தருவதால் கள்ளின் மரபும் ஊழியூழி வாழி!

**அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:**— முருகக் கடவுளை முழுமுதற்பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

வி. பி. சார்ஜ் வேறு. **கலாநிலயம், வேப்பேரி, சென்னை.**



# மலர்வனம்

## காதன் மாதவி

வடிவிற் சிறந்தோள் வடமீன் கற்பினள் கடிமணங்
கொண்ட கண்ணகி தன்னொடு மின்பக் கடலினை
யிணங்கித் துய்த்துப் பின்பவள் புலம்
655வது பக்கத் தொடர்ச்சி பப் பிரிந்தன னேகிக் கண்ணுக்கினிய
கவினொடு கருத்தால் உண்ணற்குரிய
கலையும் பொலிதரு காதற் கணிகை

மாதவி நலத்தைப் போத மகிழ்ந்து புசிப்பானாகிச் சிறப்புறு செல்வக் கோவல னென்பான் உறைதருநாளில் ஊர்வாழ் மக்கள் புரந்தரற் கொருவிழாப் புரிந்தன ரமைந்து திரைகடற் கரைவயின் சேர்ந்தனரானர்.

கண்மலர் பானல் காணத் தருச்சிர மோகைக் காட்டப் பெண்களி னரசிபோல்வார் பையப்பைய பெயர்ந்துசென்று, உண்மகிழ் துணைவரோடும் உழையவர் திரள்கள் சூழப் பண்திகழ் ஆடல்பாடல் பரிவுடன் இழைக்குங்காலை, தாழையால் வேலி கோலித் தண் மணல் வளர்ந்த புன்னை நீழல்வாய்க் காதலாலே கனிந்துள நெஞ்சின் நல்லாள் மாழையு மழுங்கும் மேனி மாதவி மருங்கி லாங்கோர் வேழத்தின் மருப்பாற் செய்த காலுடை யமளிமீது, பூவினன் மணமும் போலும் பொன்னுடை யொளியேபோலும் காவியச் சுவையைப் போலும் கலந்தவோர் பெற்றியுற்று மேவிய விருப்புமிக்க வின்பத்தி லாழ்ந்த சிந்தைக் கோவல னுவகையோடும் குலவியே வைகலுற்றான்.

வெங்கண் விதியின் விளையாட்டோ, விஞ்சையர்தங்கள் அழுக்காறோ! தன்னுடைய வங்கணற் குப்பேழ்வாய் மறலியீதென் றோராதே பெட்பினங்கை யாழொன்று தந்தா ளெடுத்து. தந்தவவ் யாழ்கொடு தன்னருந் தையலாள் சிந்தையு ளின்பமாரச் செய்வதல்லான் முந்திக் கருத்திலோ ருணமின்றிக் கோவலன் கானல் வரிப்பாணி வாசிக்கலுற்று, அகப்பொரு ளின்பத் துறையளாவி யார்வம் மிகமிக வீங்கியோங்கு மன்னன் முகத்தினை மாதவி நோக்கி வறிதேயோர் சங்கைதன்னால் ஏதிவ னுள்ளமோவென்று, அயிர்ப்பாள் அலமந்து தன்னா டெழுந்த உயிர்ப்பை யடக்குவாள், உள்ளங் கயப்பாள், நயந்தானிவன் வேறோர் நாரியை யென்னப் பயந்தாள் பரிய லானாள்.

சங்கையொன் றேவுமேல் சரத மஃதெனத் தங்களுக் கேற்றவோர் பொருளே சமைப்பதால் அங்கையில் நெல்லியங் கனியாத் தேர்வது மங்கையர் மைந்தர்கள் யார்க்கு மியற்கையே. ஆதலின் கோவலன் அங்குப் பாடிய ஏதமில் பாணியின் இயைந்த வொவ்வொரு ஆதரங் கண்டனள் என்ன லாகியே மாதவி துணிந்ததால் மாறு கொண்டனள். பாலுறு பிரையெனப்படர்ந்த நஞ்சினால்மாலுறு மனத்தினள்மாழ்கு முயிரினள் ஏதுமோ விஃதிவற்கேலுமோவெனஒலஞ் செய் உணர்வினை ஒடுக்குஞ் சூழ்ச்சியள். "இழந்துளே னிவனது முன்னை யன்பினை, பழியிது தீருமாறின்றே பார்த்திட, வழங்குவென் வரிசில வாளாவிரே"னென முழங்கிய மனத்தினுள் சலங்கள் மூளவே, வசையுறு நினைவுடைக் குரிசில் மாண்பிலா இசையெலாம் முடிவுறப் பாடி யிளைத்தபின் நசைசில தனக்குமே வேறோர் நாயகன் மிசையுள தென வவள் குறிக்க மேவினாள்.

செவ்வி நேர்ந்ததும் வஞ்சினச் சிந்தையால் யாழை, நவ்வி யுண்டகண் நங்கையுங் கையினில் வாங்கி, எவ்வமிழைத்தவன் புதைபொருட்கெதிரெதிர் பாடிக் கவ்வை விளைக்குமோர் கருத்தினை முடித்தவ ளானாள். வைத்த தீயது மூண்டது, மாதவி தன்பால் பொய்த்த கைதவம் குறிப்பினிற் புகன்றன ளென்னக் கைத்த சிந்தையின் கோவலன் கடிதவள் விட்டு எய்த்த மனத்தொடு சேருநா ளினியிலா தகன்றான். இன்ன வாறிரு வருமொரு கரவிலா திருந்தும் அன்னபரிசவர் தணந்து போய் விடுவதற் கவர்தாம் என்ன பொருளினைப் பாட்டினிற் கண்டனரென்று முன்னை நாளிவண் மொழிந்தவா நிரைநிரை யாய்வோம், நண்பர்காள் வம்மின்:—

திங்கண் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி.

[சந்திரன்போன்ற முத்துமாலையுடைய வெண்கொற்றக் குடையுடைய கரிகாற்சோழன், செங்கோல்செலுத்தி வடக்கிலுள்ள கங்கையென்னும் பெண்ணை மணந்தாலும் காவேரியே, நீ ஊடல்கொள்ளா திருக்கின்றாய், நீ வாழ்வாயாக; கயலாகிய கண்களையுடையாய், அவன் கங்கையை மணந்தாலும் நீ பிணங்காதிருக்கும் இதுதான் மாதர்களுக்குரிய பெருங்கற்பின் இலக்கணம் என்பது அறிந்தேன், காவேரியே நீ வாழ்வாயாக]

மன்னு மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோ லதுவோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னு மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி

[நிலைபெற்ற முத்துமாலையுடைய வெண்கொற்றக் குடையுடைய கரிகாற்சோழன் கோணாத தன்செங்கோலைச் செலுத்தித் தெற்கிலுள்ள குமரிஎன்னும் பெண்ணை மணந்தாலும் காவேரியே நீ ஊடாது இருக்கின்றாய், வாழ்வாயாக. குமரியை அவன் புணர்ந்தாலும் நீ பிணங்காதிருப்பது தான், கயல்களாகிய கண்களையுடையவளே, மாதர்களது நிலைத்த பெருங்கற்பு என்பது அறிந்தேன், காவேரியே நீ வாழ்வாயாக]

உழவ ரோதை மதகோதை
யுடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்த தெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன்
வளனே வாழி காவேரி.

[உழுதொழில் செய்வோர் ஆரவாரமும்,மதகுகளில் மோதும் ஓசையும், அணையை உடைத்துச்செல்லும் வெள்ளப்பெருக்கின்ஒலியும், புதுப்புனல்வரும்போதுவிழாக்கொண்டு விளையாடுவார் ஆரவாரமும்; சிறந்து ஒலிக்கக் காவேரியே நீ நடந்தாய், வாழ்வாயாக. விழவுகொள்வார் ஆரவாரம் சிறக்கும்படி நீ நடந்ததெல்லாம், வாய்காவாது வெடுவெடுவெனச் சினந்த சொல்லுடைய வீரர்களது ஆரவாரஞ் சூழ்ந்த சோழமன்னனதுசெங்கோலால் உனக்குக்கிடைத்த வளமையன்றி வேறில்லை, காவேரியே நீ வாழ்வாயாக]

எனக் கோவலன்,கரிகாற் பெருவளவன் கங்கைமுதல் கன்னியீருக இடைக்கிடந்த நாடெல்லாம் வென்றுகொண்ட வெற்றியையும், காவேரியாற்றின் வளப்பத்தையும் ஒன்றுபடுத்திப் புகழ்ந்து எங்நாடு அவன் சென்று வென்ருலும் சோணாட்டின் சிறப்புமவன் காத்துவரும் பெருமையையுங் குறித்துப் புறவொழுக்கத்திலீடுபட்டிருந்தகணவன் இல்லிற்குத் திரும்பிவர அவனோடுஊடாது உவந்திருக்கும் மனைவியைப்புகழுமோர் பாங்கியின் மொழிகளாக அமைத்துத் தன் வரிப்பாடல் பாடத் தொடங்கினன்.

இதுவரையில் நோக்குங்கா லவன் பிறிதொரு மாதின்பால் காதல்வைத்துள குறிப்பெதுவு மாதவி காண்பதற் கில்லையாயினும், பின்வரும் பாடல்களின் ஆர்வமும் பொருளும் தொகுத்து முழுமையாய் மதிப்பதாயின், ஒவ்வொன்றுந் தன்வரையில் புரைதீர்ந்து தோன்றுமேனும் அம்முழுக்கருத்தை யியக்கும்உறுப்புக்களா யமைதல்கூடும். ஆதலின் மாதவி, "காவேரியை மணந்துள கரிகாற் பெருவளவன், கங்கையையும் குமரியையும் மணக்கலானன். ஆயது அறிந்தும் காவேரி அவனோடு ஊடல் கொண்டிலள். அதுதான் பெருங்கற்பென்று பாராட்டப்படும். அதுவுமன்றிப் புலவாது காவேரி அவனோடு இணங்கியிருத்தலாற்றான் அவள் சிறப்புடன் நடந்து வருகின்ருள். அவளது வளமெல்லாம் அவன் அளித்ததே; பிணக்கத்தால் அவனைப் பிரிவாளாயின் கற்பிற் குறைவதோடு தான் பெற்றுள செல்வமும் சிறப்பும் இழந்தவளுமாவள்'' என்று கோவலன் எடுத்துக்காட்டியது, "மாதவி, நான் வேறு மாதரொடு பயின்றுவருகின்றேன், அதனை நீ அறிந்திருப்பினும் இருக்கலாம். அவ்வாறு அறிந்தும் என்பால் புலவிகொள்ளா திருக்கின்ருயாயின் உன்னுடைய பெருங்கற்பைப் பாராட்டுகின்றேன், வாழ்வாயாக; அல்லாமலும், நின்னுடைய செல்வமுஞ் சிறப்பும் என்னுல் எய்தியதென்று அறிந்து அதற்குத் தக நடந்துகொள். என் புறவொழுக்கத்தை இன்று நீ யறியாயினும் பிறிதொருநாள் அறியவரினும் நீ ஊடாதிருப்பதுவே உன் கற்பு மாத்திரமன்றி நின் செல்வமும் சிறப்பும் நின்பால் நிலைக்கும்படி செய்யும்; என்னைப்பிரிந்தால் எல்லாம் இழப்பாய்காண்'' எனத் தன்னை அச்சுறுத்திவைத்த குறிப்புடையதெனக் கொண்டனள். கொண்டவள் தன்முறையில் இதற்கெதிர் பின்வருமாறு பாடினள்:-

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்த தெல்லா நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
யறிந்தேன் வாழி காவேரி

[பக்கத்தில் வண்டாகிய வளையல்கள் மிகுந்து ஒலிக்கவும், அழகிய பூவாடைபோர்த்தும், கரிய கயலாகிய கண்களைவிழித்தும் காவேரியே நீ துவண்டு நடந்தாய்,அவ்வாறு நடந்ததெல்லாம் நின்கணவனுகிய சோழவேந்தனது திருந்திய செங்கோல் கோடாதிருப்பதற்குக் காரணமாயிற்றென்பதை அறிந்தேன், காவேரியே, நீ வாழ்வாயாக]

பூவார் சோலை மயிலாடப்
புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை யருகசைய
நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை யருகசைப
நடந்த தெல்லா நின்கணவன்
நாம வேலின் திறங்கண்டே
யறிந்தேன் வாழி காவேரி

[மலர்கள் நிறைந்த சோலையில் மயில்கள் ஆடவும், குயில்கள் விரும்பி இசைபாடவும், விருப்பந்தரும் மாலை அருகில் அசையவும் காவேரியே, நீ நடந்தாய். அவ்வாறு நீ நடந்தது எல்லாம் உன்கணவனுகிய சோழவேந்தனது அச்சம் தரும் வேலினது திறத்திற்குக் காரணமாவது கண்டறிந்தேன், காவேரியே நீ வாழ்வாயாக.]

வாழி யவன்றன் வளநாடு
மகவாய் வளர்க்குந் தாயாகி
ஊழி யுய்க்கும் பேருதவி
ஒழியாய் வாழி காவேரி
ஊழி யுய்க்கும் பேருதவி
ஒழியா தொழுக லுயிரோம்பும்
ஆழி யாள்வான் பகல்வெய்யோன்
அருளே வாழி காவேரி.

[அவனது வளநாட்டைப் பிள்ளைபோல் வளர்க்கும் தாயாகி ஊழிவரையில் நடத்திவைக்கும்பேருதவியைக் காவேரியே நீ ஒருபோதும் கைவிடாதிருப்பாயாக—அவ்வாறு நீ விடாதிருப்பது, உயிரைக் காக்கும் சக்ரவர்த்தியாகி நடுவு நிலைமையை விரும்புவான் அருளிற்கு ஆதாரமாகும், காவேரியே நீ வாழ்வாயாக]

கோவலன் பாடிய ஆற்று வரிப்பாடல்களுக்கேற்க மாதவியின் பாடல் இவைகளும்கற்பியலைச் சார்ந்துள. மனைவியின் செல்வங்கள் நிலைப்பதற்கு அவள் கணவனுடைய மனங்கோணுது பொறுத்தலே என்று அவன்பாடல்கள் குறித்ததால்,இவளதுகூற்று அதனை மறுத்துக் கணவனது செல்வம் சிறப்பு வீரம் நடுவுநிலைமை யாவற்றிற்கும் காரணம் இல்லாள் மனங்கோணுது அவன் ஒழுகுதலேயாம் எனக் காட்டும் பொருள் எளிதில் அறியலாம். எனின், கோவலனைப் பார்த்து மாதவி, ''ஐய, நின்னு லெனக்கு நலமுளது என்றெண்ணற்க. யான் என்செயினும் அதற்கிசைந்து நீ ஒழுகுங்காறும் உனக்குத்தான் பயனுளது.'' என்று தன்மேம்பாட்டை எடுந்துரைத்துவற்புறுத்துகின்றனள் என்ன உன்னினன் கோவலன். இதனோடு பூசல்முடிந்திருக்குமாயின்பின்னர்க்குறைவொன்றும் நேர்ந்திராது. 'என்னுல் நீயோ உன்னுல் நானோ' என்னும் இகல் சிறிதில்லாது இல்வாழ்க்கை நடப்பது அருமை. எனினும் அதுபற்றி அவ்வியங்கொண்டு கணவனு மனைவியும் பிரிவதுமில்லை. மற்று,மேலினிக் களவியல் துறைவரு கோவலன் பாடல்களே மாதவியைப் பெரிதும் உருத்தின. அன்னதற் கெதிர் களவியல்நெறியில் அவள் பாடிய பாடல்களாற்ருன் அவ்வியம்புகுந்திட அன்புபெயர்ந்த நிலையினன் கோவலன் ஆயினன். அவைகளை நண்பர்காள், பிற்றைநாள் காண்குவம்.




## ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்:சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்ருர். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்தநூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும்
விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பில் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0-12-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

## பருந்தும் நிழலும்.

A. பாலகிருஷ்ணன் M. A. B. L. இயற்றியது.

டிக்வன்ஸி, எமர்ஸன், லாண்டார், ரஸ்கின் போன்ற பல ஆங்கில ஆசிரியர்களின் பிரபலமான கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கிய நூல். அவ்வக் கட்டுரைகளுக்குத் தோற்றுவாய் விளக்கம் முதலியனவும் அருமையாய் எழுதியிருக்கின்றார்.

விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

மானேஜர், கலா நிலயம்.

11. வேளாளர் தெரு, புரசை, சென்னை.

## நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்துகொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

## குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

## பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0

,, சாதாரண கட்டடம் ,, 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் ... ... | ரூ | 5 | 0 |
| அயோத்தியாகாண்டம் ... | | 5 | 0 |
| ஆரணியகாண்டம் ... ... | | 4 | 0 |
| கிட்கிந்தாகாண்டம் ... | | 4 | 8 |
| சுந்தரகாண்டம் ... ... | | 5 | 0 |

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,

புரசைவாக்கம், சென்னை.

## Our Publications.

**Kamban's Kosala.**

By T. N. Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

**Thoughts for Statesmen**

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணா 4.

உலக அதியசம். விலை அணா 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணா 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணா 4.

Sambandar (English) விலை ,, 4.

Vali (Do) விலை ,, 4.

**The Educational Publishing Co.,**

**Nungambakam, Madras.**




# வர்த்தமானம்

## பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கம்.

பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டிமார் சங்கத்தின் 1929-ம் வருட அறிக்கை வருமாறு:—இச்சங்கம் 6 வருடங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்டது. நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்கள் நன்மைக்காகவும் இச்சங்கம் உழைத்து வருகின்றது. அரசாங்கத்தின் மதிப்பையும் இது பெற்றுளது. பர்மாவில் ஏற்படும் முக்கியமான பிரச்னைகள் விஷயமாய் முடிவுசெய்யுமுன் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களது அபிப்பிராயமும் இச்சங்கமூலம் தெரிந்து அரசாங்கத்தார் காரியங்களைச் செய்கின்றனர், எனவே இச்சங்கத்தின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றது என்பது வெளிப்படை.

இந்திய ஏகாதிபத்திய வங்கித் தொழிலை (Banking) விசாரித்து அத்தொழிலின் விருத்திக்கு வழி தேடும்பொருட்டு ஏற்பட்ட அகில இந்திய மத்தியக் கமிட்டியில் செட்டிமார்கள் விரும்பியவாறு ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அங்கத்தினர் ஸ்தானம் பெற்றிருக்கின்றார். அகில இந்தியக் கமிட்டியின்கீழ் உள்நாட்டு விஷயமாய் விசாரித்து மத்தியக் கமிட்டிக்குத் துணைசெய்யும்படி ஏற்படுத்திய உள்நாட்டுக் கமிட்டியில் திவான்பகதூர் A. M. M. முருகப்பசெட்டியார் அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இந்திய வியாபாரச் சங்கத்துடன் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் சங்கமும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள மற்றைய மாகாணங்களைவிடச் சென்னை ராஜதானியில் சிவில் கைதிகள் அதிகமாயிருப்பதன் காரணத்தைக் கண்டுபிடித்துக் கூறும்படி 1914 வருஷம் இந்திய அரசாங்கத்தார் ஒரு சிவில் உத்தியோகஸ்த்தரை நியமித்தனர். அவர் தமது அறிக்கையில் சிவில் கைதிகளின் தண்டனை காலம் 6 வாரமாகச் செய்யவேண்டுமென்றும் எப்பொழுது வேண்டுமானாலும் டிகிரித் தொகைகளைச் சிறிது சிறிதாக வசூலிக்கக் கோர்ட்டார் உதவிசெய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார். இவ்விஷயமும் வங்கிக் கமிட்டியால் பரிசோதனை செய்யப்படும்.

பர்மா சர்வகலாசாலைக்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் பொருளுதவி செய்துள்ளார்கள். அப்பொருளை மேற்படி சர்வகலாசாலையார் விநியோகிக்கும் விஷயமாய்ச் செட்டிமார்களைக் கலந்ததின்பேரில் கலாசாலைகளில் பாங்கிங் சொல்லிக்கொடுக்க இந்நிதி உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்று அவர்கள் கூறினர். இது அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.

காந்திஅடிகள் பர்மா வந்திருந்தசமயம் செட்டிமார்கள் அவரை வரவேற்றுக் கதர் நிதிக்காக 40000 ரூபாய் கொடுத்தனர். தனவசிய இளைஞர் சங்கத்தின் சார்பாக 5000 ரூபாய் கதர் நிதிக்கு அளிக்கப்பட்டது. தனியாகச் சில செட்டிமார் சில தொகை அளித்தனர். வைசிராய் பர்மா வந்தபொழுது செட்டியார் சங்கத்தினிலிருந்து உபசரணைக் கமிட்டிக்கு ஒரு அங்கத்தினர் தெரிந்தெடுக்கப்பட்டார். செட்டியார்களுக்குரிய சௌகரியங்கள் பல சங்கம் மூலம் வளர்ந்து வருகின்றன. இந்தியாவிலிருந்து பர்மாவுக்குவரும்செட்டிமார்களை வரவேற்று அவர்களுக்குச் சௌகரியம் செய்துகொடுக்க இச்சங்கத்துச் சிப்பந்திகள் துறைமுகம் சென்று வேண்டுவன செய்கின்றனர். பர்மாவிலிருந்து இந்தியா செல்பவருக்குட் டிகட்டுகள் எடுத்துக் கொடுக்கப்படுகின்றன.

இச்சங்கத்தின் சார்பாக ஒரு புத்தகசாலை யிருக்கின்றது. அதில் ஆங்கிலப்புத்தகங்களும் தமிழ்ப் புத்தகங்களும் இருக்கின்றன. பலர் இதை உபயோகித்து வருகின்றனர். அநேகமாய் எல்லா வர்த்தமானப் பத்திரிகைகளும் சங்கத்திற்கு வருகின்றன.

ஸர் எம் ஸி. டி. முத்தைய செட்டியார் மரணத்திற்காக இச்சங்கத்தார் வருந்தி, அவர் குடும்பத்தாருக்குத் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தனர்.

ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்களுக்கு ராஜா பட்டம் கிடைத்தது பற்றியும், ஸ்ரீமான் S. Rm. Ct. சபாரத்தனம் செட்டியாரவர்களுக்கு ராவ்பகதூர் பட்டம் கிடைத்தது பற்றியும் இச் சங்கத்தார் மகிழ்ச்சியுற்றனர்.

பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டிமார் சங்கத்தின் தலைவர்கள், ஸ்ரீமான்களான வீ. தெ. இராமன் செட்டியாரும், வீ. தெ. குமரப்பசெட்டியாரும் ஆவர்.

உபத்தலைவர், வீ. முரு. பெ. அண்ணாமலை செட்டியார்.

காரியதரிசிகள் :-சா. அ. ச. பழனியப்ப செட்டியார், சா. அ. ச. இராமன் செட்டியார்.

உதவிக்காரியதரிசி :-சொ. மு. அரு. அருணாசலம் செட்டியார்.

பொக்கிஷதார் :-ராம. அரு. அரு. ராம சொக்கலிங்கம் செட்டியார்.

கமிட்டியில், பர்மாவிலுள்ள செட்டிமார்களின் பிரதிநிதிகளான 38-பேர் இருக்கின்றனர்.


## கௌசிக சிரோ கல்பம்.

தைலங்கள் இனித் தேவை யில்லை. வியாபாரிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், வக்கீல்களுக்கும், மாணாக்கர்களுக்கும் மற்றும் மூளைவேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது. இக்கல்பம்பாலிலாவது ஜலத்திலாவது கொதிக்கவைத்து உபயோகிக்கலாம். மண்டையிடி, ஒற்றைத் தலைவலி, கண்எரிச்சல் மூளைக்கொதிப்பு முதலியவற்றை உடனே போக்கிக் கண்களுக்கு வன்மையையும் பிரகாசத்தையும் கொடுக்கும்.

பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.

இதனை விற்க எங்கும் ஏஜண்டுகள் தேவை:—

மானேஜர்:—சேலம் ஸ்டோர்,

சேலம்—SALEM.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

*MANAGER:—*

***"KALANILAYAM"***

*11, VELLALA STREET.*

**Purasawalkam MADRAS.**

189074

**1928**-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

*சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A .B. L.—51 கட்டுரைகள்.*

2. கம்ப இராமாயணம்

*பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.*

3. அகப்பொருள் வரலாறு

*காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. இராமரத்னம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.*

4. காந்திமதி

*காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N. சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.*

5. தமிழ்ப்பாடம்

*நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.*

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

*பிரிடரிக் நிஷேன் எபிகுயூரன் ஜீனோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,*

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

*E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்

*தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்*

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

*கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.*

10. இலக்கியக் கதைகள்

*புரந்தரனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்*

11. வானசாஸ்திரம்

*இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.*

மலர்வனம் பழமுதிர்சோலை

*சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.*

*காலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.*

| விலை விபரம்—தபால் செலவு உள்பட:— | | | |
|---|---|---|---|
| | பையின்டு செய்யாதது | உள்நாடு ரூ 8—0—0 | வெளிநாடு ரூ 9—8—0 |
| | ஆப்லெதர் கில்டுபயிண்டு | உள்நாடு ரூ 10—0—0 | வெளிநாடு ரூ 11—8—0 |
| | காலிகோ பயிண்டு | உள்நாடு ரூ 9—8—0 | வெளிநாடு ரூ 11—0—0 |

*கலா நிலயம் ஆபீஸ்,* 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)